செயலாற்றுகைஅறிக்கை-2012

தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

நிதி, திட்டமிடல் அமைச்சு

தூர நோக்கு

அரசாங்க வளங்களின் வினைத்திறன் மிக்க ஒதுக்கீடு ஒன்றினூடாக சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

பணிக்கூற்று

அரச சேவைகளின் வினைத்திறன் கொண்ட நடவடிக்கை, அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கான வளங்களின் ஏற்பாடு மற்றும் விநியோகம் என்பவற்றை செய்வதற்கூடாக பொது நிதி முகாமைத்துவம் குறித்த சட்டவாக்கத்திற்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு உதவியளித்தல்.

தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்

அ. தேசிய வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரித்தல்

- 03 வருட காலப்பகுதிக்கான நடுத்தரக் கால வரவு செலவுத்திட்ட வேலைச்சட்டகத்தினைத் தயாரித்தல். மற்றும்
- அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசிறை இலக்குகளை அடைந்து கொள்வதற்கு செலவின முகவராண்மைகள் மற்றும் தொடர்புடைய திறைசேரி திணைக்களங்கள் என்பவற்றுடன் கலந்துரையாடி அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கான வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரித்தல்;

ஆ. அரசாங்க செலவின முகாமைத்துவம்

- வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபங்களை வெளியிடல்.
- அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காக நிதி பயன்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒதுக்கீட்டு வரவு செலவுத் திட்ட முகாமைத்துவ நடவடிக்கைகளை செயற்படுத்துதல்.
- செலவினங்களின் பயன்பாட்டுத் தன்மையினை உறுதிப் படுத்துவதற்காக செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.
- நிதியியல் போன்ற பௌதிக முன்னேற்றங்களை கண்காணிப்பதற்கான செலவினங்களை பகுப்பாய்வு செய்தல்.
- அரசாங்க கணக்குகள் மீதான குழுவில் (COPA) தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினை பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- தொடர்புடைய அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் பற்றிய அவதானிப்புக்களைத்தயாரித்தல்.
- வாகனங்கள் கொள்வனவுக்கான அங்கீகாரத்தினை வழங்குதல்.
- நிதியியல் குத்தகை முறைமையின் கீழ் அனைத்து அரசாங்க முகவராண்மைகளுக்கும் வாகனங்களைக் கொள்வனவு செய்தல்.
- சபைகள் மற்றும் குழுக்களில் அலுவலர்களின் பங்கு பற்றல்.
- திணைக்களத்தின் நிதி நிருவாகம்

இ. நியதிச் சட்ட சபைகளுடன் தொடர்பான செயற்பாடுகள் (வர்த்தகம் அல்லாத அரசாங்க நிறுவனங்கள்)

- நியதிச் சட்ட சபைகளுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- பொது தொழில் முயற்சிகள் மீதான குழுவில் தேசிய வரவு செலவுத்திட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

ஈ. முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

- செலவிடும் முகவர்களுடன் கலந்துரையாடுவதன் பேரில் வர்த்தக, களஞ்சியங்களில் அரசாங்க அலுவலர்களுக்கானமுற்பணக் கணக்குகள் மீதான எல்லைகளை தீர்மானித்தலும் மீளாய்வு மீதான வேண்டுதல்களை வரையறுத்தலும்.
- முற்பணக் கணக்குகள் சார்ந்த விடயங்கள் பற்றிய பொதுக் கணக்குக் குழுக்கள் தொடர்பான கூட்டங்களில் திறைசேரி சார்பாக குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தல்

உள்ளடக்கம்

அத்தியாய இல.		விடயம்	பக்கம்
01.		**மேன்நோக்கு**	
	1.1	செயற்பாட்டு வேலைச் சட்டகம்	01
02		**செயலாற்றுகை மீளாய்வு 2012**	
	2.1	2012 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டம்	04
	2.2	2012 இற்கான வரவு செலவுச் செயலாற்றுகை	05
	2.3	அரசாங்க செலவினப் பரம்பல்	12
	2.4	நடுத்தரக்காலச் செலவின வேலைச்சட்டகத்தில் 2012 வரவு செலவுத் திட்டத்தின் துறைரீதியான நோக்கு 2012- 2014	12
	2.5	துறைரீதியான செலவினப் பகுப்பாய்வு 2012	13
	2.6	அரசாங்க நலன்புரிக் கொடுப்பனவுகள் மற்றும் அபிவிருத்தி உதவித் தொகைகள் மீதான செலவினப் பகுப்பாய்வு	21
	2.7	**2012 வரவு செலவுத்திட்ட முகாமை**	
	2.7.1	அரசாங்க கணக்குகள் என்ற வகையில் வருமானமும் செலவினமும்	23
	2.7.2	அரசாங்க செலவின முகாமை	26
	2.7.3	செலவினக் கட்டப்பாடு	
	2.7.4	வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபங்களை வெளியிடுதல்	
	2.7.5	குறைநிரப்பு மதிப்பீடுகள்	27
	2.8	முற்பணக் கணக்குகளின் கண்காணிப்பு	28
03.		**2012 ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்**	
	3.1	வரவு செலவுத்திட்ட தயாரிப்பு வழிகாட்டல்கள்	28
	3.2	வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளுக்கான துறைரீதியான அணுகுமுறை - 2013	29
04.		**விசேட நடவடிக்கைகள்**	
	4.1	இலாபமீட்டாத அரசாங்க தொழில் முயற்சிகளின் முகாமை	29
	4.2	அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் அவதானிப்புகள்	30
	4.3	"தேசத்திற்கு மகுடம்" அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் -2012 இனை ஒருங்கிணைத்தல்	
	4.4	வாகனங்கள் கொள்வனவிற்கான அங்கீகாரம்	
	4.4.1	வாகனக் கொள்வனவுகளுக்கான வரவு செலவுத்திட்ட அங்கீகாரம்	
	4.4.2	நிதியியல் குத்தகை முறைமையின் கீழ் அரசாங்க முகவராண்மைகளுக்கான வாகனக் கொள்வனவு	31
	4.5	சபைகளிலும் குழுக்களிலும் பதவியினரின் பங்குபற்றுதல்	32
05.		**தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு**	
	5.1	திணைக்களத்தின் பதவியணி	32
	5.2	**மனித வள அபிவிருத்தி**	33
	5.2.1	வெளிநாட்டு பயிற்சி	
	5.2.2	உள்நாட்டுப் பயிற்சி	35
	5.3	**தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் நிதி நிருவாகம்**	36
	5.3.1	செலவினத் தலைப்பு 240 இன் சுருக்கம்	37
	5.3.2	2011 ஆம் ஆண்டுக்கான கருத்திட்ட ரீதியில் வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகளும் உண்மையான செலவினமும்	37
	5.3.3	2011 ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் வினாக்கள்	39

01. மேன்நோக்கு

தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் நிதி, திட்டமிடல் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் செயற்படுகின்றது. திணைக்களத்தின் பணியானது நடுத்தரக்கால செலவின வேலைச்சட்டகத்தின் துறை ரீதியான அடிப்படையில் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை உருவாக்குவதற்கான பொறுப்பு காணப்படுகிறது என்றவகையில் இது முழுமொத்த நடுத்தரக் கால பேரண்ட பொருளாதார வேலைச்சட்டகத்தினைக்(Medium Term Expenditure Framework) கொண்டுள்ளது. நடுத்தர செலவின வேலைச்சட்டகமானது அரசாங்கத்தின் செலவினத்தினை முகாமைசெய்வதற்கு குறிப்பிட்ட கவனத்தைச் செலுத்தும் நிதி திட்டங்களையும் துறைரீதியான கொள்கை உபாயங்களையும் கொண்டுள்ளது. இச்செயன்முறையானது நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்கத்தின் நியதிச் சட்ட முகவர்கள் மற்றும் திறைசேரி திணைக்களங்கள் என்பவற்றுடன் தொடர்ந்தேர்ச்சியான உசாவுகையினைக் கொண்டுள்ளது.

1.1 தொழிற்பாட்டு வேலைச்சட்டகம்

இத்திணைக்களத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் செயலாற்றுகையானது அமைச்சின் நிதி மற்றும் திட்டமிடல் என்ற விரிந்த நோக்கெல்லையினை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன், தேசிய வரவுசெலவு திட்டத் திணைக்களத்தின் பொதுவான ஆணையினையும் பிரதிபலிக்கின்றது. இத் திணைக்களம் 2013 வரவு செலவுத் திட்டம் தயாரித்தல் மற்றும் நடுத்தரக்கால செலவின வேலைச்சட்டகம் 2013 - 2015 போன்ற செயற்பாடுகளினை கீழே அட்டவணை 1.1 இல் குறிப்பிடப்பட்டவாறு 2012 இல் செயற்படுத்தியது.

அட்டவணை 1.1
2012 ஆம் ஆண்டின் செயலாற்றுகை சுருக்கம்

தொழிற்பாடு	நடவடிக்கை	பொதுவான இலக்கு	அடைவு
1. 2012 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத் திட்டத்தையும் செலவின முகாமையையும் செயற்படுத்துதல்	• செலவின முகாமைத்துவம் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்கும் வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கைகளை வெளியிடுதல்	• பொது செலவினத்தினை வினைத்திறன் மிக்கதாக முகாமை செய்தல்.	• இது தொடர்பில் 156 மற்றும் 157 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைகளை வெளியிடுதல்.
	• எதிர்பாராத செலவினங்களுக்கான மேலதிக நிதி ஏற்பாடு மற்றும் பாராளுமன்றத்திற்கு குறைநிரப்பு மதிப்பீடுகளை சமர்ப்பித்தல்	• எதிர்பாராத செலவினங் களுக்காக நிதி ஏற்பாடு செய்தல்	• வெள்ளம், வறட்சி போன்ற எதிர்பாராத நிகழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கான விஷேட தேவைப்பாடுகளுக்கான மேலதிக நிதி பாராளுமன்றத்தில் மதிப்பீடாக சமர்ப்பிக்காது அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லைக்குள் மீள் ஒதுக்கீட்டினை முகாமை செய்தல்.
	நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் கீழ் நிதி மாற்றல்களுக்கு அதிகாரமளித்தல்	• அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுள் செலவினங்களைப் பேணுதல்	• நிதிப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 1,687 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு அவற்றுள் 184 விண்ணப்பங்கள் நிகழ்ச்சித்திட்ட மாற்றல்

தொழிற்பாடு	நடவடிக்கை	பொதுவான இலக்கு	அடைவு
			களாகவும் 1,702 கருத்திட்ட மாற்றல்களாகவும் காணப்பட்டன.
2. 2013 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரித்தல்	• வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல் தொடர்பான வரவு செலவுத்திட்ட வழிகாட்டல்களை வழங்குதல். • செலவின முகவராண்மைகள் மற்றும் தொடர்புடைய திறைசேரி திணைக்களங்கள் என்பவற்றுடன் கலந்துரையாடி வரைவு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல் • தொடர்புடைய அமைச்சுக்களுடன் வரவு செலவுத் திட்ட கலந்துரையாடல்களை நடாத்துதல்	• வரவு செலவுத் திட்டம் தயாரித்தல் தொடர்பான வழிகாட்டல் கொண்ட தனித்தனியான கடிதங்களை தொடர்படைய நிரல் அமைச்சுக்களுக்கு வழங்குதல். • அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை வேலைச்சட்டகம்; எதிர்கால தூர நோக்கில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதை உறுதிப் படுத்தல். • உண்மையான தேவைகளை நிறைவேற்றி யதார்த்தவரவு செலவுத்திட்டம் ஒன்றினைத் தயாரித்தல்	• 2013 - 2015 நடுத்தர கால அரசாங்க அபிவிருத்திக் கொள்கை வேலைச்சட்டகத்துள் 2013 வரவு செலவுத்திட்டத்திற்கான செலவினத்தினை தயாரித்தல். • அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் தெரிவுசெய்யப்பட்ட அமைச்சுக்களுக்கான ஆரம்ப வரவு செலவுத்திட்ட கூட்டங்கள் நடாத்தப்பட்டன • தொடர்புடைய அமைச்சுக்களின் அமைச்சர்களின் தலைமையில் கூட்டங்களை நடாத்துதல்
	• குறித்த நேரத்தில் 2013 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான தேவையான நடவடிக்கைளை எடுத்தல்.	• ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2012 ஒக்தோபர் மூன்றாம் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். • விபரமான அச்சிடப்பட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்	• 2013 கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2012.09.28 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. • தொடர்புடைய சகல செலவினத் தலைப்புகளையும் கவனத்திற் கொண்டு பின்னணி விபரங்களுடன் விபரமான அச்சிடப்பட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்

தொழிற்பாடு	நடவடிக்கை	பொதுவான இலக்கு	அடைவு
		• ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான அங்கீகாரத்தினை பாராளுமன்றத்தின் மூலம் பெற்றுக்கொள்ளல்	• 2012.10.09 ஆம் திகதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. • 2012.11.08 இல் வரவு செலவுத்திட்டம் (இரண்டாவது வாசிப்பு) பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. • 2012.12.08. இல் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினை பாராளுமன்றம் நிறைவேற்றியது. • 2012.12.08 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களினால் 2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் சான்றுபடுத்தப்பட்டது.
3.கொள்கை மற்றும் செலவினத்தின் மீளாய்வு	• அமைச்சரவை விஞ்ஞாபனம் மீதான அவதானிப்புகளை சமர்ப்பித்தல்	• அரசாங்கம், துறைரீதியான கொள்கை மற்றும் செலவினத்தின் பகுப்பாய்வினை உரிய நேரத்தில் அமைச்ரவை விஞ்ஞாபனத்தின் கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகளை சமர்ப்பித்தல்	• அமைச்சரவை விஞ்ஞாபனம் மீது 256 அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் திறைசேரியில் ஏனைய திணைக்களங்களின் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மீது 240 கருத்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.
4. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்கள உள்ளக முகாமை	• பொது நிருவாகம்	• திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மனிதவளப் பயன்பாட்டையும் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளையும் வினைத் திறன்மிக்கதாக பயன் படுத்தபபடுவதனை உறுதிப் படுத்துதல்	• ஒதுக்கீட்டில் ரூபா 1,477.9 மில்லியன் பயன்படுத்தப்பட்டது. அதாவது மீண்டெழும் செலவினம் 68.5 மில்லியன் மூலதனச் செலவினம் 1409.4 மில்.
	• திணைக்கள முற்பணக் கணக்குகளின் கட்டுப்பாடு	• திணைக்கள முற்பணக் கணக்கு வரையறைகளுக்கு இணங்க தேசிய வரவு செலவுத் திட்டத்திணைக்கள அலுவலர்களின் அனைத்து	• அதிகாரமளிக்கப்பட்ட எல்லைகள் கடைப் பிடித்து, அலுவலர்களுக்கு இடர் கடன், சைக்கிள் கடன், விஷேட முற்பணம், விழா முற்பணம் ரூபா 3,968,834 வழங்கப்பட்டுள்ளது.

தொழிற்பாடு	நடவடிக்கை	பொதுவான இலக்கு	அடைவு
		விண்ணப்பங்களுக்கும் கடன்/ கடன் மானியம் வழங்கப்பட்டது.	
	• திறன் விருத்தி	• உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி ஊடாக மனிதவள அபிவிருத்தி	• தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்கள செயபாடுகள் தொடர்பில் 10 அலுவலர்கள் வெளி நாட்டு பயிற்சிக்கு அனுப்பப்பட்டதுடன் 14அலுவலர்கள் உள் நாட்டு பயிற்சி பெற்றுள்ளனர்.
	• அறிக்கைகளை சமர்ப்பித்தல்	• இறுதித் தினத்திற்கு முன் பின்வரும் அறிக்கைகளின் சமர்ப்பிப்பு: (அ) செயலாற்றுகை அறிக்கை (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு	• பின்வரும் அறிக்கைகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. (அ) செயலாற்றுகை அறிக்கை 2011 (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு 2011
	• கணக்காய்வு வினாக்களுக்கான விடைகள்	• கணக்காய்வு வினாக்களை குறைத்தல் • அரசாங்க கணக்குகள் மீதான குழுவில் பங்குபற்றுதல்	• 07 கணக்காய்வு வினாக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டதுடன் அவை அனைத்திற்கும் விடைளிக்கப்பட்டுள்ளன

2. 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவத் திட்டத்தைச் செயற்படுத்துதல்

2.1 2012 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம்

2011 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 18 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் பிரகாரம்,2012 ஆம் ஆண்டுக்கான முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் உட்பட மதிப்பிடப்பட்டுள்ள அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் ரூபா 2,224 பில்லியனாகவும் உயர்ந்தபட்சக் கடன் பெறும் எல்லை ரூபா 1,150 பில்லியனாகவும் இருந்தது. அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் பினவருமாறு விபரமாகத் தரப்பட்டுள்ளது.

- அரசாங்கத்தின் பொதுச் சேவைகள் சார்ந்த செலவினம் — ரூபா. 1,284 பில்லியன்
- விசேட சட்டங்களின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டதும் திரட்டிய நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டியதுமான அரசாங்கத்தின் செலவினம் — ரூபா. 936 பில்லியன்
- முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் சார்ந்த செலவினம் — ரூபா. 4 பில்லியன்

நிதி, திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் அதிமேதகு சனாதிபதி அவர்கள் அவரது ஆளுமைக்கு உட்பட்ட வகையில் வரவு செலவத் திட்ட உரையின் போது மீண்டுவரும் செலவினத்திலிருந்து இரண்டு சதவீதச் சேமிப்பையும் மூலதனச் செலவினத்திலிருந்து ஒன்பது சதவீதச் சேமிப்பையும் பணிப்பாணையாக முன்மொழிந்தார். அதனால் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் ரூபா. 2,194பில்லியன் வரை குறைக்கப்பட்டது. வருமானம் மற்றும் செலவினத்தின் முன்மொழிவுகளுக்கான ஏற்பாட்டைத் திருத்தி 2012 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின்

கடன்பெறுகையானது ரூபா 1,150 பில்லியனிலிருந்துரூபா 1,139 பில்லியன் வரை குறைக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் 2012 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 21 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு, கௌரவ சபாநாயகர் அவர்களினால் சான்றுப்படுத்தப்பட்டதன் மூலம் அது பாராளுமன்றத்தின் ஒரு சட்டமாக்கப்பட்டது.

2.2. 2012 ஆம் ஆண்டுக்கானவரவு செலவுத் திட்டத்தின் செயலாற்றுகை

கருத்திட்டங்களின் நியதிகளின் மூலமும் நிதியளிப்பு மூலங்களுடன் செலவு விடயத்தின் மூலமும் ஒன்றுதிரட்டப்படாத தலைப்பு ரீதியான செலவினங்கள்,வரவு செலவுத் திட்ட உரையுடன் அச்சிடப்பட்ட மதிப்பீடுகளில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டதும் நிதி அமைச்சர் அவர்கள் அச்சிடப்பட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவினத்தைச் செய்வதற்கு அதிகாரமளிக்கும் அனுமதியை வழங்கினார். 2012 ஆம் ஆண்டுக்காகபாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் 201 செலவினத் தலைப்புகளில்/ செலவின அலகுகளுக்கிடையே ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அது 22 விசேட செலவின அலகுகளையும், 54 அமைச்சக்களையும், 125 திணைக்களங்களையும் உள்ளடக்கியிருந்தது.

குறித்த வருட காலப் பகுதியில் மூலதனச் செலவினத்திற்கான ரூபா 12.8 பில்லியன் மேலதிக ஏற்பாட்டுத் தவைப்பாடுகள், ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5 ஆம் உறுப்பிரையின் பிரகாரமும் நிதி ஒழுங்கு விதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடவடிக்கை முறைகளின் பிரகாரமும் மீண்டுவரும் செலவினத்தின் சேமிப்புகளை மாற்றல் செய்வதன் மூலம் இணக்கம் காணப்பட்டது. ரூபா 73.4 பில்லியனுக்கு கணக்கு கூறிய குரைநிரப்பு வரவு செலவு ஏற்பாடுகள் கடன் சேவைக் கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்டன. கடன் சேவைக் கொடுப்பனவுகள் விசேட சட்டங்களின் மூலமும் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட செலவின வகையில் இருக்கின்ற படியினால் நிதி அமைச்சர் அவர்களினால் ஒரு அனுமதியினை வழங்குவதன் மூலம் வழங்கப்பட்டு இந்த குறைநிரப்பு ஏற்பாடுகளுக்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் தேவைப்படுவதில்லை. அதற்கேற்ப 2012 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் நீங்கலாக 2,268 பில்லியன் ஆகும்.

2012 ஆம் ஆண்டுக்காக பதிவுசெய்யப்பட்டுள்ள மொத்தச் செலவினம் ரூபா 2.192 பில்லியன் ஆகும். அதற்கேற்ப 2012 ஆம் ஆண்டுக்காக பயன்படுத்தப்படாத வரவு செலவு ஏற்பாடு ரூபா 73 பில்லியன் அல்லது 3 சதவீதமாகும். இவற்றில் ரூபா 13 பில்லியன் மீண்டுவரும் செலவின ஏற்பாடுகளாகவும் மீதி 60 பில்லியன் மூலதனச் செலவின ஏற்பாடுகளாகவும் அமைந்திருந்தன. அத்தகைய சேமிப்பொன்று பதிவாகியுள்ள போதிலும் வருடத்திற்காக இலக்கு வைக்கப்பட்ட நடவடிக்கைகள் அரசாங்ககத்தின் அபிவிருத்தி உபாயத்தை மையப்படுத்தி சகல நிரல் அமைச்சுக்களும் திணைக்களங்களும் நிறுவனங்களும் வழங்கலைப் பயன்படுத்தியதன் மூலம் அடையக் கூடியதாக இருந்தது. வரவு செலவு ஏற்பாடுகளின் பயன்பாட்டின் விவரமான மீளாய்வு அட்டவணை 2.1 இல் தரப்படுகின்றது.

2.1 ஏற்பாடுகளின் பயன்பாட்டின் முன்னேற்றம் - 2012

அமைச்சின் பெயர்	மீண்டெழும்							மூலதனம்						
	ஆரம்பவு செலவு மதிப்பீடு (1)	2% இல் வரவு செலவு சேமிப்புகள் (2)	திறைசேரியின் நானாவித செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல் (3)	மூலதனத்திற்கான நிதி ஒழுங்கு விதி மாற்றல் (4)	மொத்த ஏற்பாடு (மீள்) **((1)+(2)+(3)+(4)தொகை)** (5)	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு (6)	பயன்படுத்தப்படாத ஏற்பாடு (5)-(6) (7)	ஆரம்ப வரவு செலவு மதிப்பீடு (1)	9% இல் வரவு செலவு சேமிப்புகள் (2)	திறைசேரியின் நானாவித செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல் (3)	மூலதனத்திற்கான நிதி ஒழுங்கு விதி மாற்றல் (4)	மொத்த ஏற்பாடு (மீள்) **((1)+(2)+(3)+(4)தொகை)** (5)	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு (6)	பயன்படுத்தப்படாத ஏற்பாடு (5)-(6) (7)
விசேட செலவிடும் அலகுகள்	7,464	64	1,694	-	9,094	8,869	225	4,300	374	529	-	4,455	2,722	1,733
புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள்	843	15	148	-	976	814	162	1,030	74	21	-	977	709	268
நிதி, திட்டமிடல்	11,132	90	1,907	(13)	12,936	11,078	1,858	9,624	727	5,505	13	14,415	13,269	1,146
பாதுகாப்பு	215,427	187	6,596	-	221,836	220,743	1,093	15,816	768	6,447	-	21,495	17,830	3,665
பொருளாதார அபிவிருத்தி	18,547	30	2,798	(4.0)	21,311	21,160	151	86,024	7,717	140	4	78,451	72,663	5,788
அனர்த்த முகாமைத்துவம்	635	8	27	(56)	598	555	43	784	71	64	56	834	558	276
தபால் சேவைகள்	7,853	17	497	-	8,333	8,333	-	346	35	10	-	321	235	86
நீதித்துறை	3,418	12	464	(7)	3,863	3,836	27	819	74	234	7	986	920	66
சுகாதாரம்	55,000	-	4,258	-	59,258	57,859	1,399	19,500	1,755	121	-	17,866	13,647	4,219
வெளிநாட்டு அலுவல்கள்	5,700	-	1,630	-	7,330	7,305	25	940	13	264	-	1,191	995	196
போக்குவரத்து	13,540	271	2,734	(2)	16,001	15,844	157	40,000	4	385	2	40,383	32,010	8,373
பெற்றோலியக் கைத்தொழில்	101	2	-	-	99	94	5	7	1	3	-	10	6	4
கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகம்	707	10	430	-	1,127	1,067	60	600	50	4	-	554	211	343

2.1 ஏற்பாடுகளின் பயன்பாட்டின் முன்னேற்றம் - 2012

அமைச்சின் பெயர்	மீண்டெழும்							மூலதனம்						
	ஆரம்பவு செலவு மதிப்பீடு	2% இல் வரவு செலவு சேமிப்புகள்	திறைசேரியின் நானாவித செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல்	மூலதனத்திற்கான நிதி ஒழுங்கு விதி மாற்றல்	மொத்த ஏற்பாடு (மீள்) **((1)+(2)+(3)+(4)தொகை)**	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு	பயன்படுத்தப்படாத ஏற்பாடு (5)-(6)	ஆரம்ப வரவு செலவு மதிப்பீடு	9% இல் வரவு செலவு சேமிப்புகள்	திறைசேரியின் நானாவித செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல்	மூலதனத்திற்கான நிதி ஒழுங்கு விதி மாற்றல்	மொத்த ஏற்பாடு (மீள்) **((1)+(2)+(3)+(4)தொகை)**	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு	பயன்படுத்தப்படாத ஏற்பாடு (5)-(6)
துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்	200	-	-	(3)	198	196	2	144,367	-	3,396	3	147,766	146,682	1,084
விவசாயம்	2,381	13	54	(3)	2,419	2,391	28	3,708	327	-	3	3,384	2,829	555
மின்வலு மற்றும் சக்தி	1,083	22	-	(9)	1,053	459	594	32,500	852	707	9	32,365	32,207	158
சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரம்	734	6	42	(1)	769	717	52	215	19	48	1	245	201	44
பொது நிருவாகம் மற்றும் உற்நாட்டு அலுவல்கள்	135,954	80	4,944	-	140,818	140,538	280	2,000	180	876		2,696	2,221	475
வெகுசன ஊடகம் மற்றும் தகவல்	1,658	33	277	(1)	1,901	1,848	53	447	40	14	1	422	235	187
நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள்	712	8	37	-	741	708	33	2,075	201	194	-	2,068	1,734	334
சமூக சேவைகள்	914	5	594	(1)	1,501	1,472	29	204	16	1	1	191	103	88
கல்வி	27,250	6	1,790	-	29,034	28,977	57	6,016	3	551	-	6,564	4,641	1,923
தொழில் மற்றும் தொழில் உறவுகள்	1,120	22	12	-	1,110	1,089	21	400	23	20	-	398	329	69

2.1 ஏற்பாடுகளின் பயன்பாட்டின் முன்னேற்றம் - 2012

அமைச்சின் பெயர்	மீண்டெழும்							மூலதனம்						
	ஆரம்பவு செலவு மதிப்பீடு	2% இல் வரவு செலவு சேமிப்புகள்	திறைசேரியின் நானாவித செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல்	மூலதனத்திற்கான நிதி ஒழுங்கு விதி மாற்றல்	மொத்த ஏற்பாடு (மீள்) **((1)+(2)+(3)+(4)தொகை)**	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு	பயன்படுத்தப்படாத ஏற்பாடு (5)-(6)	ஆரம்ப வரவு செலவு மதிப்பீடு	9% இல் வரவு செலவு சேமிப்புகள்	திறைசேரியின் நானாவித செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல்	மூலதனத்திற்கான நிதி ஒழுங்கு விதி மாற்றல்	மொத்த ஏற்பாடு (மீள்) **((1)+(2)+(3)+(4)தொகை)**	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு	பயன்படுத்தப்படாத ஏற்பாடு (5)-(6)
பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறிய தொழில்முயற்சி அபிவிருத்தி	522	10	4	-	517	507	10	300	15	123	-	409	327	82
உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள்	95,059	1,899	1,149	-	94,309	92,059	2,250	34,714	2,950	4,330	-	36,094	25,566	10,528
தொழில்நுட்பம் மற்றும் ஆய்வு	1,149	23	-	-	1,126	1,058	68	2,027	182	13	-	1,858	1,125	733
தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு	253	5	35	(1)	282	234	48	183	12	3	1	175	136	39
பெருந்தோட்டக் கைத்தொழில்	1,882	15	9	(2)	1,873	1,487	386	1,194	56	11	2	1,152	776	376
விளையாட்டுத் துறை	552	11	0	-	541	483	58	1,542	139	7	-	1,410	880	530
சுதேச மருத்துவம்	787	16	29	-	800	764	36	477	43	99	-	533	300	233
மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி	821	14	227	(2)	1,032	1,019	13	2,248	198	580	2	2,632	1,967	665
கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி	449	9	11	(10)	441	439	2	2,239	182	204	10	2,271	2,105	166
தேசிய மரபுரிமை	754	6	32	-	780	724	56	822	57	3	-	768	481	287
பாராளுமன்ற அலுவல்கள்	322	6	25	-	341	341	-	37	73	-	-	-37	21	-58
மீள் குடியேற்றம்	273	5	-	(47)	221	200	21	209	19	154	47	391	346	45

2.1 ஏற்பாடுகளின் பயன்பாட்டின் முன்னேற்றம் - 2012

அமைச்சின் பெயர்	மீண்டெழும்							மூலதனம்						
	ஆரம்பவு செலவு மதிப்பீடு	2% இல் வரவு செலவு சேமிப்புகள்	திறைசேரியின் நானாவித செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல்	மூலதனத்திற்கான நிதி ஒழுங்கு விதி மாற்றல்	மொத்த ஏற்பாடு (மீள்) **((1)+(2)+(3)+(4)தொகை)**	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு	பயன்படுத்தப்படாத ஏற்பாடு (5)-(6)	ஆரம்ப வரவு செலவு மதிப்பீடு	9% இல் வரவு செலவு சேமிப்புகள்	திறைசேரியின் நானாவித செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல்	மூலதனத்திற்கான நிதி ஒழுங்கு விதி மாற்றல்	மொத்த ஏற்பாடு (மீள்) **((1)+(2)+(3)+(4)தொகை)**	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு	பயன்படுத்தப்படாத ஏற்பாடு (5)-(6)
கைத்தொழில் மற்றும் வணிகம்	751	14	-	-	737	656	81	1,249	112	16	-	1,152	494	658
நீர்ப் பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவம்	3,335	5	75	-	3,405	3,299	106	32,500	2,65 1	1,000	-	30,849	28,155	2,694
காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி	2,393	6	38	(2)	2,423	2,416	7	2,815	253	197	2	2,761	2,235	526
இளைஞர் விவகார மற்றும் திறன் விருத்தி	3,917	92	60	-	3,885	3,778	107	4,700	423	17	-	4,294	3,269	1,025
சுற்றாடல்	1,400	14	21	(2)	1,405	1,329	76	2,017	182	34	2	1,871	955	916
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு	156	2	36	-	190	169	21	33,000	2,98 8	2,480	-	32,492	31,110	1,382
உயர் கல்வி	15,716	314	6	-	15,408	15,333	75	8,754	658	236	-	8,332	5,553	2,779
பொது முகாமைத்துவ மறுசீரமைப்பு	86	2	-	(3)	81	64	17	100	2	-	3	101	36	65
புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு	3,769	75	103	(80)	3,717	3,627	90	553	42	50	80	641	421	220
அரச வளங்கல் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி	107	2	4	(2)	106	97	9	105	2	4	2	108	32	76
விமானப் போக்குவரத்து	87	2	-	(1)	84	78	6	12,007	1	2,822	1	14,829	14,801	28

2.1 ஏற்பாடுகளின் பயன்பாட்டின் முன்னேற்றம் - 2012

அமைச்சின் பெயர்	மீண்டெழும்							மூலதனம்						
	ஆரம்பவு செலவு மதிப்பீடு	2% இல் வரவு செலவு சேமிப்புகள்	திறைசேரியின் நானாவித செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல்	மூலதனத்திற்கான நிதி ஒழுங்கு விதி மாற்றல்	மொத்த ஏற்பாடு (மீள்) **((1)+(2)+(3)+(4)தொகை)**	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு	பயன்படுத்தப்படாத ஏற்பாடு (5)-(6)	ஆரம்ப வரவு செலவு மதிப்பீடு	9% இல் வரவு செலவு சேமிப்புகள்	திறைசேரியின் நானாவித செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல்	மூலதனத்திற்கான நிதி ஒழுங்கு விதி மாற்றல்	மொத்த ஏற்பாடு (மீள்) **((1)+(2)+(3)+(4)தொகை)**	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு	பயன்படுத்தப்படாத ஏற்பாடு (5)-(6)
கலாச்சாரம் மற்றும் கலைகள்	810	12	12	-	810	761	49	703	63	34	-	673	438	235
தெங்க அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி	564	11	4	-	556	536	20	1,200	90	18	-	1,128	555	573
கமத்தொழில் சேவைகள் மற்றும் வனசீவராசிகள்	37,541	4	2,779	-	40,316	40,316	-	1,437	129	275	-	1,583	1,074	509
சிறு ஏற்றுமதிப் பயிர் ஊக்குவிப்பு	443	4	-	-	439	391	48	281	25	32	-	288	264	24
வினைத்திறன் மேம்பாடு	259	5	562	-	816	808	8	105	9	7	-	103	76	27
வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி	82	2	2	-	83	70	13	310	28	-	-	282	28	254
மகக்ள்தொடர்பு மற்றும் பொது விவகாரம்	49	-	-	-	49	49	-	110	10	1	-	101	86	15
தனியார் போக்குவரத்துச் சேவைகள்	479	10	2	-	472	235	237	229	-	19	-	248	66	182
தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம்	59	1	7		66	66	-	9	-	450	-	459	455	4
திறைசேரியின் நானாவித செலவு விடயம்	51,800	-	-	(12,591)	505	-	505	21,100	-	-	12,591	941	-	941

2.1 ஏற்பாடுகளின் பயன்பாட்டின் முன்னேற்றம் - 2012

அமைச்சின் பெயர்	மீண்டெழும்							மூலதனம்						
	ஆரம்பவு செலவு மதிப்பீடு	2% இல் வரவு செலவு சேமிப்புகள்	திறைசேரியின் நானாவித செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல்	மூலதனத்திற்கான நிதி ஒழுங்கு விதி மாற்றல்	மொத்த ஏற்பாடு (மீள்) ((1)+(2)+(3)+(4)தொகை)	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு	பயன்படுத்தப்படாத ஏற்பாடு (5)-(6)	ஆரம்ப வரவு செலவு மதிப்பீடு	9% இல் வரவு செலவு சேமிப்புகள்	திறைசேரியின் நானாவித செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல்	மூலதனத்திற்கான நிதி ஒழுங்கு விதி மாற்றல்	மொத்த ஏற்பாடு (மீள்) ((1)+(2)+(3)+(4)தொகை)	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு	பயன்படுத்தப்படாத ஏற்பாடு (5)-(6)
மொத்தம் (அரச கடன் மற்றும் வட்டிக் கொடுப்பனவு அற்ற மதிப்பீடு)	**739,000**	**3,494**	**36,162**	**(12,843)**	**720,122**	**709,345**	**10,777**	**541,000**	**24,917**	**32,750**	**12,843**	**528,925**	**471,090**	**57,835**
அரச கடன் தீர்ப்பு /வட்டிக் கொடுப்பனவு	370,000	-	40,822	-	410,822	408,987	1,835	570,000	-	35,129	-	605,129	**602,814**	**2,315**
முழு மொத்தம்	**1,109,000**	**-**	**76,984**	**(12,843)**	**1,130,944**	**1,118,332**	**12,612**	**1,111,000**	**-**	**67,879**	**12,843**	**1,134,054**	**1,073,904**	**60,150**

2.3 அரசாங்கத்தின் செலவினப் பரம்பல் - 2012

2012 இல் வட்டி அல்லாத அரசாங்கத்தின் செலவினமானது, அரசாங்கத்தின் மொத்தச் செலவினத்தில் 74% சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ரூபா 1,167 பில்லியன் தொகைக்குக் கணக்குக் கூறியது. மொத்தத் தேசிய உற்பத்தி தொடர்பில் அது 15.4 சதவீதமாகும். இந்தத் தொகை அரசாங்கத் துறையில் அரசாங்க சேவைகளுக்கும் மூலதன உருவாக்கத்திற்காகவும் வழங்குவதற்கான ரூபா 563 பில்லியன் மீண்டுவரும் செலவினத்தையும் ரூபா 444 பில்லியன் மூலதனச் செலவினத்தையும் உள்ளடக்கிய ரூபா 1,007 பில்லியனுக்குக் கணக்குக் கூறக்கூடிய பாதுகாப்புச் செலவினம் தவிர்ந்ததாகும்.

மனித வள அபிவிருத்தி மீதான மொத்த முதலீடு 2007 இல் காணப்பட்ட ரூபா 161 பில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 235 பில்லியன் வரை அதிகரித்து 2012 இல் மொத்தத் தேசிய உற்பத்தியில் 3.1% சதவீதத்திற்குக் கணக்குக் கூறியது. மேலும் சமூகப் பாதுகாப்புச் செலவினம் அரசாங்கத் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவின் மீது 65 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 2007 இல் காணப்பட்ட ரூபா 120 பில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 235 பில்லியன் வரை அதிகரித்தது.உட்கட்டமைப்பு மீதான முதலீடு2007 முதல் 2012 வரை இரு மடங்குகளுக்கும் மேலான அதிகரிப்பைச் சுட்டிக்காட்டி முறையேரூபா 159 பில்லியனிலிருந்துரூபா 406 பில்லியன் வரை அதிகரித்துள்ளது.

2.4 நடுத்தர கால செலவின வேலைச் சட்டகத்தில் 2012 வரவு செலவுத்திட்டத்தின் துறைரீதியான நோக்கு 2012-2014

2012 வரவு செலவுத்திட்டம் பிரதாகமாக மஹிந்த சிந்தனை, தூர நோக்கு, அபிவிருத்திக்கான வேலைச்சட்டகம் மற்றும் அதில் அடையாளங்காணப்பட்ட உபாயங்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டது. இலங்கையினை ஆசியாவின் வளர்ந்துவரும் அதிசயமொன்றாக மாற்றும் அரசாங்கத்தின் பொறுப்புடமையின் மீது பாரிய கவனம் செலுத்தும் வகையில் இது மாற்றப்பட்டிருந்தது. 2012 வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துகையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் பிரயோகிக்கப்பட்டன.

(அ) துறை அடிப்படை – 2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் அடுத்த 3 வருடங்களுக்கு அந்தந்த துறைக்கான அக்கறை செலுத்துநர்களினால் தயாரிக்கப்பட்ட துறை ரீதியான கொள்கை வேலைச்சட்டகத்துடன் இணங்கியதாகக் காணப்பட்டது.

(ஆ) யதார்த்த மதிப்பீடு – 2012 வரவு செலவுத்திட்டமானது அரசியலமைப்பின் உறுப்புரை 150(2) மற்றும் உறுப்புரை 150(3) என்பவற்றின் நியதிகளுக்கமைவாக ஏற்பாடு செய்யப்பட்ட வரையறைகளின் கீழ் செய்யப்பட்ட உண்மையான செலவின மதிப்பீடொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகும்.

(இ) செயலாற்றுகை அல்லாத கருத்திட்டங்கள்- பல வருடங்களாக மதிப்பீடு களில் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய கருத்திட்டங்கள் அனைத்தும் மீள் உருவாக்கப்படுதல் அல்லது விட்டுவிடல்.

(ஈ) பிரதிபண்ணல் அல்லது மேலமைவு என்பவற்றினைத் தவிர்த்தல்- செலவின முகவராண்மைகள் மற்றும் மாகாண சபைகள் துறை ரீதியான ஒதுக்கீடுகள், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படும் ஒரே வகையான செயற்பாடுகளுக்கு முறையாகப் பகிரப்படுகிறது என்பதை உறுதிப்படுத்தல்.

இந்தச் செயன்முறைகளுக்கு வசதியளிக்கும் வகையில் சமூகப் பாதுகாப்பு, மனிதவள அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மெய்ப் பொருளாதாரம் சுற்றாடல், ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பம், அரசாங்க சேவை வழங்கல், பாதுகாப்பு மற்றும் சட்ட அமுல்படுத்துகை போன்ற ஒன்பது துறைகளின் கீழ் அனைத்து அமைச்சுக்களும் திணைக்களங்கள் மற்றும் பிற செலவின முகவராண்மைகளும் வகைப்படுத்தப்பட்டன. இதற்கமைவாக தாம் பெற்றுக்கொண்ட செயற்பாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு செலவின முகவராண்மையும் மேற்குறிப்பிட்ட ஒன்று அல்லது கனிசமான துறைகளில் இடம்பெற்றன.

2.5 துறைரீதியான செலவினம் மீதான பகுப்பாய்வு -2012

2012 - 2014 நடுத்தரக் காலத்திற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாட்டு பின்னணிகளின் அடிப்படையில் ஒன்பது துறைகளின் கீழ் தயாரிக்கப்பட்டது. 2011இல் உள்ளவாறு செயற்படுத்தப்பட்ட மற்றும் அதிகமான முதலீடுகள் தேவைப்பட்ட அர்ப்பணிப்புகளில் உண்மையான செயலாற்றுகையினை மீளாய்வு செய்வதற்கு உரிய பணிப்புரைகள் ஆரம்பத்தில் வழங்கப்பட்டிருந்தன மீண்டெழும் செலவினத்தினை குறைக்கும் நோக்கத்துடன் பணிப்புரைகள் அதிக தேவையுடைய அவசியப்பாடுகளை வரையறை செய்யும் வகையில் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2012 ஆம் ஆண்டின் போது துறைரீதியான அடிப்படை மற்றும் உண்மையான செலவினத்தின் அடிப்படையில் தாபிக்கப்பட்ட முன்னுரிமைகளுக்கான ஒதுக்கீடுகளின் ஒப்பீட்டாய்வு அட்டவணை 2.2. இல் வழங்கப்பட்டது. இதுவும் எதிர்பாராத செலவினங்களை ஈடுசெய்வதற்கு மேலதிக ஒதுக்கீடுகளான தொகையினை உள்ளடக்கி இருந்ததுடன் எதிர்பாரா செலவினங்கள் மற்றும் குறைநிரப்பு ஏற்பாடுகள் மீதான வரவு செலவுத்திட்ட முன்மொழிவொன்றாக செயற்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

பல்வேறு அபிவிருத்தித் துறைகள் தொடர்பான துறை ரீதியான செயலாற்றுகைகள் கீழே குறிப்பிடப்பட்டள்ளன.

அட்டவணை 2.2
துறைரீதியான வளங்களின் ஒதுக்கீடு எதிர் உண்மையான செலவினம்–2011

துறை	2011 வரவு செலவுத்திட்டம் (ரூபா மில்.)	மொத்த ஒதுக்கீட்டின் %	2011 உண்மை (ரூபா மில்.)	மொத்த செலவினத் தின் %	பயன்பாட்டு %
மனிதவள அபிவிருத்தி	245,569	19.2	221,273	18.7	90
போக்குவரத்து	229,950	18.0	218,055	18.5	95
மின்வலு மற்றும் சக்தி	34,402	2.7	32,766	2.8	95
நீர்ப்பாசனம்	42,470	3.3	36,799	3.1	87
நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்	35,713	2.8	31,342	2.7	88
வீடமைப்பு மற்றும் நகரஅபிவிருத்தி	5,923	0.5	4,026	0.3	68
பிராந்திய அபிவிருத்தி	110,355	8.6	91,247	7.7	83
தேசியப் பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கல்	238,424	18.7	237,017	20.1	99
சமூகப் பாதுகாப்பு	147,775	11.6	145,918	12.4	99
உண்மையான பொருளாதாரம்	64,100	5.0	58,253	4.9	91
சேவைப் பொருளாதாரம்	98,614	7.7	84,234	7.1	85
தொழிநுட்ப அபிவிருத்தி	17,214	1.3	15,322	1.3	89
சுற்றாடல்	7,009	0.5	4,182	0.4	60
மொத்தம்	**1,277,518**	**100.0**	**1,180,434**	**100.0**	**92**

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
குறிப்பு: படுகடன் தணிப்பு நீங்களாக
அபிவிருத்தியடைந்த துறைகள் திறைசேரி படிவத்துக்கு அமைவாகவும் மேற்கொள்ளப்பட்டது.

மனிதவள அபிவிருத்தி

கல்வி

மத்திய மற்றும் மாகாண மட்டங்கள் ஆகிய இரண்டிலும் சாதாரண கல்வி, உயர் கல்வி, தொழிற் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கிய கல்வித் துறை மீதான மொத்த முதலீடு 2011 இல் காணப்பட்ட ரூபா 111 பில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 136 பில்லியன் வரை அதிகரித்தது. நாடு முழுவதிலும் கல்வியின் தரம் மற்றும் சாதாரண கல்விக்கான சமமான அணுகுகை என்பவற்றை மேம்படுத்துதல் ஆகியவற்றின் பொருட்டு கல்வித் துறையில் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையில் ரூபா 90 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் பயிற்சி, பாடவிதான அபிவிருத்தி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு ஆகிய வழிகளின் மூலம் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கல்விக்கான சமமான அடைவு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக 2012 ஆம் ஆண்டில் 1,000 இரண்டாந் தரப் பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் 5,000 ஆரம்பப் பாடசாலைகள் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தநிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், இரண்டாந் தரப் பாடசாலைகளில் 409 மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களின் நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு 2012 ஆம் ஆண்டில் ரூபா 400 பில்லியன் செலவிடப்பட்ட அதேவேளையில், 1,716 ஆரம்பப் பாடசாலைகளை மெருகூட்டுவதற்கு ரூபா 858 பில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

உயர் கல்வித்துறையின் மீதான செலவினம் 2011 இல் காணப்பட்ட ரூபா 19 பில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 21 பில்லியன் வரை அதிகரித்தது. இந்தத் தொகையில் உயர் கல்விக் குழுவின் இடைத்தொடர்பு மற்றும் அபிவிருத்தி என்பவற்றைச் சரிசெய்வதற்கு வசதியளிப்பதற்காக புதிதாக இணைத்துக் கொள்ளப்படுபவர்களுக்கான 02 வார கால மறுபயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் மீது ரூபா 69 பில்லியன்களைச் செலவிடுகின்ற அதேவேளையில், பல்கலைக் கழக மாணவர்களின் வாழ்க்கைக்கு ஆதரவளிக்கும் பொருட்டு மஹாபொல மற்றும் உபகாரக் கொடுப்பனவு ஆகியவற்றின் மீது ரூபா 1 பில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களில் தற்போது இடம்பெற்றுவரும்104 நிர்மாணக் கருத்திட்டங்களிடையே 30 பாரியகருத்திட்டங்கள் 2012 இல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதேவேளையில் தொடர்புடைய வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் ஸ்ரீ ஜயவர்தனபுர, மொரட்டுவை, யாழ்ப்பாணம் மற்றும் றுஹுணு ஆகிய பல்கலைக்கழகங்கள் 2012 இல் பல்கலைக்கழக நகரமயமாக்கல் தொடர்பான தமது ஆரம்பத் திட்டங்களைத் தயாரித்துள்ளன.

தொழிற் கல்வியின் மீது அரசாங்கம் விசேட கவனத்தைச் செலுத்துகின்றபடியினால், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்காக அதிகரித்துவரும் கேள்விக்கு முகம் கொடுக்கக் கூடிய உயர் தரமான தொழிற் பயிற்சியை வழங்கும் பொருட்டு 2012 ஆம் ஆண்டில் தொழிற் பயிற்சி மற்றும் திறன்விருத்தி ஆகியவற்றின் மீது ரூபா 7 பில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. தொழில்நுட்பத் துறையில் 25 பல்கலைக்கழகக் கல்லூரிகளை அபிவிருத்தி செய்யும் எண்ணக்கரு 2012 இல் ஆரம்பிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக கல்விதொடர்பான துறைகளில் ஏனைய அமைச்சுக்களினூடாக ரூபா 18 பில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரம்

2012 இல் மேலைத்தேய மற்றும் சுதேச வைத்தியத்துறை உள்ளடங்களாக தேசிய மற்றும் மாகாண மட்டம் இரண்டிலும் சுகாதாரத்துறைக்கு வழங்கப்பட்ட மொதத் அரசாங்க முதலீடுரூபா 101 பில்லியனாகும். 2007 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 43 சதவீதம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றை இது சுட்டிக்காட்டியுள்ளது.மீண்டெழும் செலவினத்தில் பாரிய பகுதியொன்றும்மூலதனச் செலவினத்தில் கணிசமான செலவொன்றும் மருத்துவச் சேவைக்காகக் கணக்குக் கூறியுள்ளது. பயன்படுத்தப்பட்டுள்ள ரூபா 92 பில்லியன் மொத்தத் தொகையில் 84 சதவீதம் மீண்டெழும் செலவினமாகவும் 16 சதவீதம் மூலதனச் செலவினமாகவும் காணப்படுகின்றது. ஆளுக்குரிய வேதனாதிகள் 66 சதவீதத்தினையும்மருந்து வழங்கல்களுக்காக 22 சதவீதத்தினையும்மீண்டெழும் செலவினம் உள்ளடக்கியுள்ளது. மேலும் ரூபா 1.3 பில்லியன் திரிபோஷாவுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

2012 இல் மூலதனச் செலவினங்களுக்கான ஒதுக்கீடு பிரதானமாக வைத்தியசாலை அபிவிருத்தி வைத்தியசாலை புனரமைப்பு மற்றும் உபகரணங்கள் வழங்குதல் என்பவற்றுக்காக செலவிடப்பட்டுள்ளது. மொத்த மூலதனச் செலவினத்தில் 2012 ஆம் ஆண்டுக் காலபபகுதியில்69 சதவீத்தினை மாத்திரமே இத்துறை பயன்படுத்துவதற்கு முடியுமாக இருந்தது.வைத்தியசாலை அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பலவற்றைச் செயற்படுத்துவதில் உள்ள திருப்திகரமான முன்னேற்றம் உள்நாட்டு நிதியைப் பயன்படுத்துவதில் சான்றாக அமைந்தன. இது 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவாகக் குறிப்பிடப்பட்ட ஆயிரம்வைத்தியசாலை அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நாடு பூராகவும் உள்ள வைத்தியசாலை வலையமைப்பில் நீண்ட காலமாக

உணரப்பட்டுவந்த அம்பியூலன்ஸ் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 250 அம்பியூலன்ஸ் வண்டிகளின் கொள்வனவு என்பவற்றை உள்ளடக்கியது. மேலும் நிதியளிப்பின் பெரும் பகுதி தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியாவிலுள்ள மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காக்கை வலிப்பு அலகினை நிர்மாணித்தல்,கொழும்பு பற்சிகிச்சை வைத்தியசாலையின் அபிவிருத்தி மற்றும் பொலநறுவை பொதுவைத்தியசாலையின் அபிவிருத்தி போன்ற பிரதான கருத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

சுதேச மற்றும் ஆயுர்வேத வைத்தியமுறைமை போன்ற பாரம்பரிய சுகாதாரத்துறைக்கு 2007 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது திருப்திகரமான இரு மடங்கு அதிகரிப்பொன்றைச் சுட்டிக்காட்டி 2012 இல் ரூபா 2.1 பில்லியனை முதலீடு செய்வதன் மூலம் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. மேலும் 2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆயுர்வேத மருத்துவ முறையினூடாக மருத்துவச் சேவைக்காக நிதிகளை ஒதுக்கி,தடுப்புச் சுகாதாரச் சேவைகளை மேம்படுத்துவதற்கு பாரிய முக்கியத்தவம் வழங்கப்பட்டுள்ளது.

விளையாட்டு மற்றும் ஊழியர்துறை

விளையாட்டுப் பொருளாதாரத்தினை அறிந்து கொண்டு விளையாட்டுத்துறைக்கு ரூபா 1,365 மில்லியன்களை அரசாங்கம் முதலீடு செய்துள்ளது. உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் மனித வள அபிவிருத்தி ஆகியவற்றுக்கு முன்னரிமை வழங்கப்பட்டள்ளது. அதற்கேற்ப 8 மாகாண மற்றும் 14 மாவட்ட விளையாட்டுத் தொகுதிகள், அலுவலகக் கட்டடம்டொரிங்டன் ஓட்டப்பாதை ஆகியவற்றின் நிர்மாணிப்புக்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.2012 இல்பாடசாலைகளில் விளையாட்டுக்களின் அபிவிருத்திக் கருத்திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

கிராமிய விளையாட்டுத் துறைஅபிவிருத்திக்கு ஆதரவளித்து, கிராமிய விளையாட்டு மைதானஅபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராமிய ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளையாட்டு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. மேலும் இந்த நோக்கத்திற்காக மீள்-பொறியியல் நிகழ்ச்சித்திட்டம்“கிரீடா சக்தி” நிகழ்ச்சித்திட்டம்மாவட்டப் பயிற்சி வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பனவும் 2012 இல் நடாத்தப்பட்டன.

தேசிய தொழில் ஆலோசனைச் சபையை பலப்படுத்துவதன் மூலம் இந்தத் துறையை மீள்-பொறியியல் மூலமாக இலங்கையின் தொழிலாளரின் திறனை தரம் உயர்த்துவதற்கு அரசாங்கத்தினால் புதிய அணுகுமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. தொழிலாளர் உரிமைகளையும் ஊழிய உறவுகளையும் பாதுகாத்தல், ஊழிய உறவுகள்உற்பத்தித்திறன் மேம்பாட்டு, மனிதவலு மேம்பாடு இலங்கையின் தொழிலாளர் படையின் திறனை தரம் உயர்த்துதல். நாட்டின் ஊழியப்படையின் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்தல் ஆகியவற்றுக்கு ரூபா 2,300 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

சமயம், கலை மற்றும் கலாசாரம்

2012 இல் சமயம், கலை மற்றும் கலாசாரதுறையில் மொத்த முதலீடு ரூபா 1,556 மில்லியனாகும். இந்த முதலீடானது, இலங்கையில் சமயம்,கலாசாரம்மற்றும்தேசிய மரபுரிமைகள் என்பவற்றின் செழுமையான வேறுபாட்டை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டதாகும்.

இந்த நடவடிக்கைகளின் கீழ், புனித தளங்களின் அபிவிருத்தி, அறநெறி பாடசாலைகளின் மேம்பாடு, கலாசார நிலையங்களை தாபித்தல், தொல்பொருளியல் இடங்களை பாதுகாத்தல் ஆகியவற்றுக்கு முன்னுரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.கலாசார பல்வகைத்தன்மையினை பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.அனைத்து சமய தளங்களையும் நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல் என்பவற்றுக்காக ரூபா 279 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளையில்,அறநெறிக் கல்வியை மேம்படுத்துவதற்காக மேலும் ரூபா 427 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.புனித தளங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கலாச்சார நடவடிக்கைகளை மேம்படுத்தவதற்கு கலாச்சார நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல் ஆகியவற்றுக்காக முறையே ரூபா 235 மில்லியன்மற்றும் ரூபா 123 மில்லியன்செலவு செய்யப்பட்டுள்ளது. இலக்குகளிடையே 2012 இல் 15 கலாச்சார நிலையங்கள் நிறைவு செய்யப்பட்டது.

2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில்ரூபா 216 மில்லியன் ஒதுக்கீடு செய்தன் மூலம் தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த 10 இடங்களை பாதுகாத்தல் மற்றும் பராமரிக்கும் பணிகளுக்காக முன்னுரிமை அளிக்கப்பட்டது.

உட்கட்டமைப்பு அபிவிருத்தி

பாதைகள்

2012 இல் உட்கட்டமைப்பு மீதான முதலீடு ரூபா 354.7 பில்லியனாகும். பாதைத்துறை மாத்திரம் உட்கட்டமைப்பு அபிவிருத்தி முதலீட்டில் மூன்றில் ஒன்றினை பங்களிப்புச் செய்தது. பாதைத்துறையில் முதலீட்டின் பிரதான பங்கு பாதைகள் மற்றும் பாலங்களின் புனரமைப்பு மற்றும் மீள் கட்டுமாணத்திற்காக பயன்படுத்தப்பட்டது. பாதை அபிவிருத்தி மீதான செலவினம் 2011 இல் ரூபா 101.4 பில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 135.3 பில்லியனாக அதிகரிக்கப்பட்டது.

அதிவேகப் பாதைகளின் நிர்மாணம், பிரதான தேசிய பாதைகள் மற்றும் பாலங்களின் புனரமைப்பும் மேம்பாடும் என்பவற்றுக்காக வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளர்களிடமிருந்து பெறப்பட்ட நிதிகளில் அரசாங்கம் முதலீடு செய்துள்ளது. உள்நாட்டு நிதி பிரதானமாக பாதைகளின் புனரமைப்பு, மேம்பாடு மற்றும் பராமரிப்புக்காக பயன்படுத்தப்படுகின்றது. விரிவாக்கல் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 572 கி. மீற்றர்கள் நாடுமுழுவதிலும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. தேசிய பாதை வலையமைப்பு மற்றும் பாலங்களின் பராமரிப்புக்காக ரூபா 5,961 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 867 கி.மீற்றர் மண் நிரப்பப்பட்டதுடன் 867 கி.மீற்றர் திருத்தப்பட்டு மேல்தளம் இடப்பட்டுள்ளது. 45 பழுதடைந்த பாலங்கள் மீள நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் 38பாலங்கள் 2012 இன் இறுதியில் நிறைவுசெய்யப்பட்டது.

மகநெகும கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் கிராமியப் பாதைகளை புனரமைப்பதற்கும் கட்டமைப்புச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. 2012 இல் 635.8 கி.மீ. பாதைகள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் 93 பாலங்கள், 1,112 மதகுகள், 29 கால்வாய்கள் புனரமைக்கப்பட்டு அல்லது கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளது. மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராமங்களை இணைக்கும் செயற்பாடு 2011 ஜூனில் ஆரம்பிக்கக்பட்டுள்ளதுடன் 46 கருத்திட்டங்கள் (மொத்த நீளம் 258 கி.மீ.) செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் 12 மாவட்டங்களையும் உள்ளடக்கியிருந்தது. மேலும் 35 கருத்திட்டங்களில் 197 கி.மீ. தியவர கம்மான மற்றும் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ளது. 2012 இல் மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொத்த முதலீடு ரூபா 3.1 பில்லியனாகும்.

2011 இல் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான கொள்கை தீர்மானங்களில் ஒன்று உள்நாட்டு நிதியின் கீழ் பாதைப் புனரமைப்பு பணிகளுக்கான வாய்ப்பினை உள்நாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்குதல் என்பதாகும்.ஆரம்பத்தில், 692 கி.மீ. தேசிய பாதைகளை ரூபா 56,497 மில்லியன் செலவில் புனரமைப்பதற்கு உள்நாட்டு வங்கிகளின் மூலம் உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டுக் காலப் பகுதியிலும் அதனைத் தொடர்ந்தம்559 கி.மீ. பாதை புனரமைக்கப்பட்டுள்ளது. 2011 இன் பிரதான அடைவானது, தெற்கு அதிவேகப் பாதையின் கட்டம் II இன் பகுதியான பின்னதுவ முதல் கொடகம வரை (30 கி.மீ) பாதை மற்றும் காலித் துறைமுகம் வரையான அணுகுகை வீதி (5.4 கி.மீ) நிர்மாணிக்கப்பட்டமையாகும்.

சக்தி மூலங்கள்

துரிதமாக அதிகரித்துவரும் கேள்வியினை ஈடுசெய்வதற்காக தடங்கலற்ற, வினைத்திறன்மிக்க தாங்கக்கூடிய சக்திவளங்களை உறுதிப்படுத்துவதற்கு மின்வலுத் துறையில் ரூபா 32,207 மில்லியனை அரசாங்கம் முதலீடு செய்துள்ளது. மொத்த முதலீட்டில் ரூபா 12,482 மில்லியன் மின் உற்பத்திக்காக முதலீடு செய்யப்பட்டதுடன் ரூபா 8,114 மில்லியன் மின் வழங்கலுக்காவும் ரூபா 11,408 மில்லியன் பகிர்வுக்காகவும் செலவிடப்பட்டது. 2016 அளவில் அனைவருக்கும் மின்சாரத்தை வழங்கும் இலக்கானது 2012 இன் இறுதியில் 94% சதவீதமாக அடையப்பட்டிருந்தது. ஒரு வருடத்துக்குள் தூய சக்தி வழங்கலை மேம்படுத்துவதற்காக கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

போக்குவரத்து

பொது மக்களுக்காக பயன்மிக்கதும் பாதுகாப்பானதுமான போக்குவரத்து முறையை அடையச் செய்யும் நோக்கில் 2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் போக்குவரத்து துறையின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் மீது அரசாங்கம் ரூபா 48.56 பில்லியன்களை முதலீடு செய்துள்ளது. மேற்குறிப்பிட்ட மொத்த முதலீட்டில் ரூபா 38.91 பில்லியன் புகையிரதப் போக்குவரத்தின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு சார்ந்ததாக இருந்த அதேவேளையில்,ரூபா 38.91 பில்லியன் அரசாங்க மற்றும் தனியார் போக்குவரத்து வசதிகளின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

பொது வசதிகள்

அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை வரைசட்டகம் பாதுகாப்பான குடிநீரின் செயலளவு மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகளுக்கு அதி கூடிய முன்னுரிமையை வழங்குகின்றது. 2015 ஆம் ஆண்டளவில் 50 சதவீதமானவர்களுக்கும் 2020 ஆம் ஆண்டளவில் 60 சதவீதமானவர்களுக்கும் குழாய்நீர் வசதியை அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்பொழுது 84 சதவீதமாகவுள்ள பாதுகாப்பான குடிநீரின் செயலளவு 2020 ஆம் ஆண்டளவில் 100 சதவீதமாக அதிகரிக்கப்படும். இந்த இலக்கை அடைந்து கொள்வதற்காக 2012 இல் ரூபா 39,771 மில்லியன் இத்துறைக்காக வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் ரூபா 31,261 மில்லியன் மூலதனச் செலவினத்திற்கானதாகும். மொத்தத்தில் 80 சதவீதம் பாரிய அளவு நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கரத்திட்டங்கள் மீது முதலீடு செய்யப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பாரிய நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டங்கள் நீர் கொழும்பு நீர் வழங்கல் கருத்திட்டம், பாரிய கண்டி நீர் வழங்கல் திட்டம், கொழும்பு வடக்கு நகரங்களின் நீர் வழங்கல் கருத்திட்டம் என்பனவாகும். மேலும் பலபத்வெல, ஹிங்குராக்கொட, மின்னேரியா, இப்பலோகம, பகலகடுகண்ணாவ, பிடபெத்தர, ஒஹியா மற்றும் கந்தளாய் ஆகிய இடங்களிலுள்ள வளர்ந்துவரும் நகரமயமாக்கல் நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டங்கள் / என்பனவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பாரிய கொழும்பு நீர் வழங்கல் சேவை மேம்பாட்டுக் கருத்திட்டம் (ரூபா 26,000 மில்லியன் மொத்த மதிப்பீட்டுச் செலவுடன்) மற்றும் மஹியங்கனை நீர் வழங்கல் கருத்திட்டம் என்பன 2012 இல் ஆரம்பிக்கப்பட்ட பாரிய நகர நீர் வழங்கல் கருத்திட்டங்களாகும். 2012 ஆம் ஆண்டில் மக்களுக்காக 130,000 புதிய நீர் வழங்கல் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

வீடமைப்பு

2012 இல் வீடமைப்புத் துறைக்கான உண்மையான செலவினம் ரூபா 2,442 மில்லியனாகும். இந்த வருடக் காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மொத்த மூலதன முதலீடானது ரூபா 1,734 மில்லியனாக இருந்தது. இவை கொழும்பு மாவட்டத்தில் உள்ள வீடமைப்புத் திட்டங்கள்,கிராமியவீடமைப்புக் கடன்நிகழ்ச்சித்திட்டங்கள், ஐக்கிய நாடுகள் வாழ்விட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், அங்குலான வீடமைப்பு கருத்திட்டங்கள், மொரட்டுவை லுணாவ நகர ஆரம்பிப்பதை பிரதானமாகக் கொண்டிருந்ததுடன் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட நகர வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் ஜனசெவன பங்குபற்றுச் சூழல் மற்றும் துப்புரவேற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றைப் புதுப்பிக்கின்றது. 2011 இன் இறுதியில்மொத்தம் 35,119 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய அமைச்சுக்களினால் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களினூடாக 32,766 குடும்பங்களுக்கு கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் சமூர்தி திரிய பியஸ (8,046), விசிரி நிவஸ (8,244), ஜனஉபகார வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் (6,294) மற்றும் வெள்ள நிவாரண நிகழ்ச்சித்திட்டம் (6,007) போன்ற வீடமைப்புத் திட்டங்கள் 2012 இல் செயற்படுத்தப்பட்ட பிரதான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகும்.

தபால் மற்றும் தொலைதொடர்பு

2012 இல் தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் துறைக்கு ரூபா 9.08 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது 2011 இனை விட 11.4 சதவீத அதிகரிப்பொன்றாகும். இந்நிதி பிரதானமாக நாடு முழுவதிலும் தபால் சேவையை அபிவிருத்தி செய்வதற்காக தபால் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. தபால் வலையமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டத்தினை திணைக்களத்தின் செலவினத்தினை குறைப்பதற்காக பொதுமக்களுக்கு சிறந்த சேவையினை வழங்கும் வகையிலும் அனைத்து தபால் நிலையங்களுக்கும் இணைப்பினை வழங்குதல் தொடர்ந்தும் இடம்பெற்றது. அதேவேளையில் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு 2016 அளவில் 75% சதவீதம் வரைக்கும் தகவல் தொழில்நுட்ப அறிவினை அதிகரிக்கும் வகையில் நாடு முழுவதிலும் பாடசாலைக் கணினிக் கூடங்களை போன்ற தகவல் தொழில்நுட்ப கருத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

கிராமிய மற்றும் பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி

கிராமிய மற்றும் பிராந்திய அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பல்வேறுபட்ட அமைச்சுக்களின் கீழ் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2012 இல் கிராமிய அபிவிருத்திக்கான மொத்த முதலீடு ரூபா 43.7 பில்லியனாகக் காணப்பட்டதுடன் அவற்றுள் ரூபா 27.8 பில்லியன் பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக செலவிடப்பட்டது. இந்த வகையில் அரசாங்கம் மக்களின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் நகர, கிராமிய தரத்தினை பேணுதல் என்பவற்றின் மூலம் கிராமியத் துறையின் வறுமைத் தணிப்புக்கு முன்னுரிமை வழங்கியிருந்தது. இத்துறைக்கு வழங்கப்பட்ட முதலீடு கிராமியப் பாதைகள், நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடு, சிறிய

நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்வழங்கல், வீடமைப்பு மற்றும் பிற வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

கமநெகும நிகழ்ச்சித்திட்டம் அபிவிருத்தியடைந்த மற்றும் கிராமிய மைய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கிடையில் வினைத்திறன் மிக்க தொடர்புகளை ஏற்படுத்துவதனை இலக்காகக் கொண்டுள்ளது. 2012 இல் ரூபா 12.9 பில்லியன் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக கமநெகும நிகழ்ச்சித்திட்டத்திற்கு முதலீடு செய்யப்பட்டது. திவிநெகும நிகழ்ச்சித்திட்டமானது வீட்டுத்தோட்டம் உள்ளடங்களாக வாழ்வாதாரத்தை மையமாகக் கொண்டு 1.5 மில்லியன் மனைப் பொருளாதார அலகுகளை தாபிப்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

மேலும், பிணக்கினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் கண்ணிவெடியகற்றல் நடவடிக்கைக்காக ரூபா 4 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அரசாங்கம் பாதை வலையமைப்பு அபிவிருத்தியினூடாக பிராந்திய இணைப்பினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக வளர்ந்துவரும் பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக பெறப்பட்டுள்ளது.

பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு

பாதுகாப்பு மீதான உண்மையான செலவினம் 2012 இல் ரூபா 233 பில்லியனாக காணப்பட்டது. அதில் மீண்டுவரும் செலவினம் ரூபா 219 பில்லியனாகும். மீதிரூபா 14 பில்லியன் மூலதனச் செலவினமாக இருந்தது. மொத்தச் செலவினத்தில் முப்படைகளும் பொலிஸ் திணைக்களமும்ரூபா 217 பில்லியன் தொகைக்கு கணக்குக் கூறிய அதேவேளையில், மீதி ரூபா 16 பில்லியன் சிவில் பாதுகாப்புத் திணைக்களம்,விசேட அதிரடிப் படை, தேசிய பயிலிளவல் சிறப்பணி, அரச மதிநுட்பச் சேவை, மற்றும் பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் பொது நிருவாகத்திற்காகவும் செலவிடப்பட்டன.

பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸ் என்பவற்றுக்கான சம்பளங்களுக்கான செலவினம் ரூபா 182 பில்லியனாக அல்லது பாதுகாப்பு மற்றும் பொதுப் பாதுகாப்புக்கான மொத்த மீண்டெழும் செலவினங்களின் 78%சதவீதமாகப் பதிவாகியது.மீதி ரூபா 51 பில்லியன் அல்லது 12% சதவீதம் உணவு, சீருடைகள், எரிபொருள் மற்றும் ஏனைய தொழிற்பாட்டுச் செலவினங்களுக்காக தேவைப்படுத்தப்பட்டது. ரூபா 14 பில்லியன் முலதனச் செலவினம் பிரதானமாக புதிய பொறித் தொகுதிகளையும் இயந்திர சாதனங்களையும் கொள்வனவு செய்வதற்காகவும் யுத்த காலத்தின்போது கவனிப்பாரற்றிருந்த முப்படையினரின் அடிப்படை தங்குமிட வசதிகளை வழங்குவதற்கும்செலவிடப்பட்டுள்ளது.

சட்ட வலுப்படுத்துகை

நீதித் துறை மற்றும் சட்ட வலுப்படுத்துகையின் திறன்மிக்க நிர்வாகமொன்றினை உறுதிப்படுத்துவதற்கு நீதித்துறை மீதான மொத்த செலவினம் 2012 இல் ரூபா 9,068 மில்லியனாக காணப்பட்டது. இதில் ரூபா 642 மில்லியன் நீர்கொழும்பு, கட்டுப்பொல மற்றும் கடவத்தைபோன்ற பிரதேசங்களில் புதிய நீதிமன்ற கட்டிடத் தொதிகளினதும் பாதாவிய, மன்னம்பிட்டிய மற்றும் பக்கமூன போன்ற பிரதேசங்களில் சுற்று நீதவான் நீதி மன்றங்களினதும், ஹிங்குரக்கொட, மற்றும் பொத்துவில்போன்ற பிரதேசங்களில் மாவட்டநீதவான் நீதி மன்றங்களினதும், மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர்களுக்கான தனியான நீதிமன்ற முறைமையினதும் நிர்மாணப்பணிகளை நிறைவு செய்வதற்காகவும், கல்பிட்டிய மற்றும் குச்சவெளிபோன்ற பிரதேசங்களில்சுற்று நீதவான் நீதி மன்றங்களினதும், குவாதி நீதி மன்றங்கள், அக்கரைப்பற்றுவில் மாவட்ட நீதிமன்றம், சம்மாந்துறையில் நீதவான் நீதி மன்றம் போன்றவற்றின் நிர்மாணப்பணிகளை ஆரம்பிப்பதற்கும் மற்றும் அலுவலகக் கட்டடங்கள், ஆவணக் காப்பகங்கள் மற்றும் களஞ்சியசாலைகள் ஆகியவற்றுடன் நீதி மன்றங்களுக்கான வசதிகளை வழங்குவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.வளர்ந்துவரும் சமூக, சூழல் மற்றும் அது போன்ற சட்ட நடடிக்கைமுறைகள் பற்றிய அறிவினை மேம்படுத்துவதற்கும் அதிகரித்துக்கொள்வதற்கும்ரூபா 66 பில்லியன் செலவில் 372 உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டிலும் 58உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டிலும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சமாதானம் நிலைநாட்டப்பட்ட பின்னர் இந்தப் பகுதிகளின் உட்கட்டமைப்பின் புனரமைப்புக்கும் மீள் அபிவிருத்திக்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டு பல நீதி மன்றத் தொகுதிகள்,பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களின் அவசர கருத்திதிட்டத்தின் ஆதரவில்நவீனமயப்படுத்தப்பட்டு மீளக்கட்டப்பட்டுள்ளது. மேலும், சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் விசேடமாக முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வுக்காகவும் சிறைச்சாலைகள் மீளமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் சிறைச்சாலைகள் நிர்மாணப்பதற்காகவும்ரூபா 435 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

சமூகப் பாதுகாப்பு

சமூகப் பாதுகாப்பு,சமூகப் பாதுகாப்பு வலைகள் மற்றும் சமூகப் சேவைகள் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக 2012 இல் சமூகப் பாதுகாப்புமற்றும் நலன்புரி ஆகியவற்றின் மீது செய்யப்பட்ட மொத்த முதலீடு சுமார் ரூபா 146 பில்லியன் ஆகும். இந்த நோக்கத்திற்காக ரூபா 46 பில்லியன்செலவிடப்பட்டுள்ள அதேவேளையில் அது 2011 இல் காணப்பட்ட செலவினத்துடன் ஒப்பிடுகையில் 36.5 சதவீத அதிகரிப்பொன்றாகும்.குறை வருமானக் குடும்பங்கள், வயது முதிர்ந்தோர், அங்கவீனமுற்றோர், வலதுகுறைந்தோர், மன அழுத்தத்திற்கு உட்பட்ட விரக்தியடைந்த பெண்கள் மற்றும் சிறுவர்கள்ஆகியோரின்பாதுகாப்புமற்றும் நலன்புரி ஆகியவற்றை இலக்காகக் கொண்டு பல்வேறுநிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகள் என்பவற்றினூடாகபல்வேறு கருத்திட்டங்களும்நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளன.இந்தத்துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களில்ரூபா 12,282 மில்லியன் சமூர்தி நிவாரணம், அனர்த்த நிவாரணம், இயலாமை உதவி, முதியோர் உதவி மற்றும் மீள்குடியேற்ற உதவி ஆகியவற்றுக்காகச் செலவிடப்பட்டுள்ளன.

மெய்ப் பொருளாதாரம்
விவசாயத் துறை

விவசாயத் துறையானது பிரதானமாக,உணவு பயிர்ச்செய்கை,பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, கால்நடை, மீன்பிடி மற்றும் நிரியல் வளங்கள், நீர்ப்பாசனம்,காணி மற்றும் காணி அபிவிருத்தி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. 2012 இல் விவசாயத்துறை மீதான மொத்தச் செலவினம்,ரூபா 104,456 மில்லியன் ஆகும். இது 2011 இல் காணப்பட்ட செலவினத்துடன் ஒப்பிடும் போது 23 சதவீத அதிகரிப்பினை பதிவாக்கியிருந்தது.2012 இல் காணப்பட்ட விவசாயத்துறை மீதான மொத்தச் செலவினத்தில் விவசாயத் துறையில் வினைத் திறனையும் போட்டித் தன்மையையும் மேம்படுத்துவதற்காக சிறிய அளவு விவசாயிகளுக்காக பரந்த அளவிலான ஊக்குவிப்புக்களை வழங்குவது தொடர்பாக அரசாங்கக் கொள்கையினை மெய்ப்பிக்கும் வகையில் உர மாணியத்திற்காக ரூபா 48,248 மில்லியன்செலவிடப்பட்டுள்ளன.

2012 இல் அரசாங்க முதலீடு அரசாங்கத்தின் கொள்கை ஆவணங்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மையப்படுத்தியதாக பிரதானமாகக் காணப்பட்டதுடன் உள்நாட்டு உணவு உற்பத்தி ஊக்குவிப்பு, அரசாங்க விதைப்பண்ணைகளின் அபிவிருத்தி, சான்றுபடுத்தப்பட்ட விதைகளின் உற்பத்தி, விவசாய ஆராய்ச்சி செயற்பாடுகள் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்களின் அபிவிருத்தி என்பற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது பிம் சவிய நிகழ்ச்சித்திட்டம் காணி உரிமையாளர்களின் காணி உரித்தினை உறுதிப்படுத்தும் வகையில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

உப துறைகளுக்காக 2012 இல் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினம் பின்வருமாறு.

நெல் மற்றும் ஏனைய உணவுப் பயிர்கள்

2012 ஆம் ஆண்டில் உணவுப் பயிர்களுக்கான மொத்தச் செலவினம் ரூபா 61,228 மில்லியன் ஆகும். உணவுப் பயிர்களின் மேம்பாட்டுக்கான மொத்தச் செலவினத்தில் பாரிய அளவுத் தொகை உர மானிய உதவுதொகைக்காக செலவிடப்பட்டுள்ளன. மேலும் விதை மற்றும் நடுகை உபகரணங்களின் உற்பத்தி ஆய்வு மற்றும் நீடிப்புச் சேவைகள் சலுகை விலையில் விவசாய இடுகைகளை வழங்குதல் மற்றும் காணி அபிவிருத்தி போன்றவற்றிற்காக அதிகூடிய முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த முதலீட்டின் பெறுபேறாக அத்தகைய பயிர்களின் மொத்த உற்பத்தி 2011 இல் காணப்பட்ட 506,334 மெற்றிக் தொன்னுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் 680,895 மெற்றிக் தொன்னிற்கு 34 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. சோள உற்பத்தியில் தன்னிறைவு வருடம் ஒன்றை மெய்ப்பிக்கும் வகையில் 202,315 மெற்றிக் தொன் வரையில் சோள உற்பத்தி அதிகரித்துள்ள அதேவேளையில் 2012 இல் சோளத்தின் இறக்குமதி 1,004 மெட்ரிக் தொன்வரை குறைவடைந்தள்ளது.

நீர்ப்பாசனம்

2012 ஆம் ஆண்டில் நீர்பாசனத்துறையின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூபா 30.7 பில்லியனாக காணப்பட்டது. நீர்ப்பாசன முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகளுக்கான நீர்ப்பாசன முகாமைத்துவம் மீதான முதலீடு நெல் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்ததுடன் இதன் விளைவாக பயனுகரிகளின் வருமானம் தானியங்கள், கால்நடை மற்றும் நீரியல் வளங்கள் என்பவற்றின் மூலம் அடையப்பெற்றது. போதியளவு வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு காணப்பட்ட போதிலும் தெதுரு ஓயா கருத்திட்டத்தின் 66 சதவீதமான பணிகளை நிறைவுசெய்ய முடியுமாக இருந்ததுடன் ரம்புக்கன் ஓயா கருத்திட்டத்தின் 80 சதவீதமான பணிகளும் நிறைவடைந்தது.

இத்துறை மீதான முதலீடு, உமா ஓயா, மொறகஹகந்த போன்ற புதிய நீரேந்து பிரதேசங்களின் நிர்மாணம், சுரங்கப்பாதை, பாதைகள் மற்றும் மீள்குடியேற்ற இடங்கள் என்பன உள்ளடங்களாக பயன்படுத்தப்பட்டது.

கால்நடை

2012 இன் கால்நடை துறைக்கான உண்மையான செலவினம் ரூபா 2,544 மில்லியனாகக் காணப்பட்டது.இது 2011 இல் காணப்பட்டமொத்தச் செலவினத்துடன் ஒப்பிடும் போது 12 சதவீத அதிகரிப்பொன்றாகும். இந்த முதலீடு திரவப்பால் நுகர்வு, நடுத்தரக்கால கால்நடை அபிவிருத்தி, பால் தரும் விலங்குகளின் இறக்குமதி மற்றும் "கிரி கம்மான" நிகழ்ச்சித்திட்டத்தினை தாபித்தல், விலங்கு உற்பத்தி, விலங்கு சுகாதார மேம்பாடு மற்றும் வாழ்வாதாரம் அத்துடன் பின்தங்கிய பிரதேசங்களில் கிராமிய சமுதாயங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் போன்ற கருத்திட்டங்களைச் செயற்படுத்தல் என்பவற்றிற்காக பயன்படுத்தப்பட்டது. மேலும் லீற்றர் ஒன்றுக்கு ரூபா 50.00 வரையில் விலையை அதிகரிக்கும் நோக்கத்துடன் மில்கோ லிமிட்டடுக்கு ரூபா 160 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. வருடாந்த பால் உற்பத்தி 2011 இல் காணப்பட்ட 258.3 லீற்றரிலிருந்து 2012 ஆம் ஆண்டின் இறுதியில் 299 மில்லியன் லீற்றர்களாக அதிகரித்துள்ளதன் மூலம் 16 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

மீன்பிடி

மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி துறை மீதான மொத்த அரச செலவினம் ரூபா 2,986 மில்லியன் ஆகும். இது 2011 ஆம் ஆண்டில் காணப்பட்ட மொத்தச் செலவினத்துடன் ஒப்பிடும் போது பன்னிரண்டு சதவீத அதிகரிப்பாகும். 2012 இல் காணப்பட்ட மொத்தச் செலவினத்தில் ரூபா 1,019 மில்லியன் மீண்டுவரும் செலவினத்திற்காகவும் ரூபா 1,967 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் அமைந்திருந்தது. 2012 ஆம் ஆண்டில் கடன் மற்றும் நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிப்பதன் ஊடாக மீனவச் சமுதாயத்தினருக்கு தமது வாழ்க்கைத் தரத்தை அதிகரித்துக் கொள்வதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளுக்காக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் வருடாந்த மீன் உற்பத்தியில் 486,170 மெற்றிக் தொன்னாகப் பதிவாகியுள்ளது. 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 41,340 மெற்றிக் தொன்னினால் வருடாந்த மீன் உற்பத்தி அதிகரித்ததாகும். அது 9 சதவீத அதிகரிப்பாகும்.

கைத்தொழில்கள்

2012 ஆம் ஆண்டுக்கான கைத்தொழில் துறை அபிவிருத்தி மீதான அரசாங்கத்தின் செலவினம் ரூபா 1,149.0 மில்லியன் ஆகும். இந்த நிதியங்கள் மன்னார், மத்துகமை,குருநாகல் மற்றம் திருகோணமலை கைத்தொழில் பேட்டைகள் ஆகியவற்றில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் கைத்தறிக் கிராமங்களைத் தாபித்தல் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் அபிவிருத்தி, நுண்ணிய நிதியளிப்புத் துறைகள் மற்றும் தொழில் முயற்சித்துவ அபிவிருத்தி என்பவற்றுக்காகவும் செலவிடப்பட்டுள்ளன.

சேவைகள்

சுற்றுலாத்துறை வணிகம் மற்றும் கூட்டுறவுகள் என்பன சேவைத்துறையில் உள்ளடங்குகின்றன. 2012 ஆம் ஆண்டில் இந்தத் துறை மீதனா அரசாங்கத்தின் முதலீடு ரூபா 1.6 மில்லியன் ஆகும். நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளை உணவு விநியோகத்தை பலப்படுத்துவதற்கு 2012 ஆம் ஆண்டில் 20 லக்சதொச விற்பனை நிலையங்கள் தாபிக்கப்பட்டன. இந்நிதியங்கள் பொருளாதார நிதியங்களை புனரமைப்பதற்கு செய்யப்பட்டுள்ளன.

விஞ்ஞானம், தொழிநுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

கைத்தொழில், விவசாயம், நீர்ப்பாசனம், சுகாதாரம், தகவல் தொழிநுட்பம், நீரியல் வளங்கள் போன்ற துறைகளை உள்ளடக்கிய இத்துறையில் ரூபா 10 பில்லியன் முதலீடொன்று மேற்கொள்ளப்பட்டது. தேசிய கடலியல் முன்னெடுப்புகள், பன்நோக்கு காமா கதிர்கள் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் விவசாய உணவு பாதுகாப்பு என்பன 2012 இல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. தேசிய பொருளாதாரத்தில் அபிவிருத்தி முன்னுரிமையில் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சி அபிவிருத்தி, விஞ்ஞானத்தைப் பிரபல்யப்படுத்தல், அடிப்படை மற்றும் உயர் தொழில்நுட்பப் பரிமாற்றங்களைச் செய்தல் ஆகியவற்றை மேம்படுத்தவதற்கு கவனத்தைச் செலுத்துவதன் மூலம் தொழிநுட்ப மற்றும் ஆராய்சி அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற அரசாங்க நிறுவனங்களை பலப்படுத்துவதற்கு ரூபா 1,225 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை வழங்கல்

தேசிய மற்றும் மாகாண மட்ட அரசாங்க சேவை வழங்குதல் நிர்வகித்து ஒழுங்குபடுத்துவதனையும் அத்தகைய வழிகளில் நல்லாட்சி மற்றும் மக்களை மையப்படுத்தி அபிவிருத்தி ஆகிய

நடவடிக்கைகளை கூட்டிணைப்பதற்கு வழிகளை வழங்குவதனையும் இந்தத் துறை நோக்காகக் கொண்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக துறைசார் முதலீடு ரூபா 260 பில்லியன் ஆகும். சேவை வழங்கல் ஆதரவு மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகள் செலவினம் ரூபா 232 பில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வகுதியின் கீழ் வருகின்ற அரச சேவை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவு ரூபா 127 பில்லியனுக்குக் கணக்குக் கூறியது. துறைசார் முதலீட்டில் ரூபா 28 பில்லியன் தொகை கிராமப் புற பகுதிகளில் அரசாங்க ஊழியர் விடுதிகளுக்கான கட்டடங்களை நிர்மாணித்தல் உட்பட அரசாங்க சேவைகளின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு சகல பிராந்திய மட்ட அலுவலகங்களில் தகவல் தொழில்னுட்ப அபிவிருத்தி மற்றும் வலையமைப்பு, மாகாண பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலை உட்கட்டமைப்பு அபிவிருத்தி கிராமிய மின வழங்கல் மாகாண மற்றும் கிராம மட்டத்திலான பாதை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் சிறிய நகர மயமாக்கல் அபவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகிய வசதிகளுக்கும் மூலதன முதலீடாக கணக்குக் கூறியுள்ளது.

சுற்றாடல்

2012 இல் சுற்றாடல் துறையில் மொத்த முதலீடு ரூபா 2,379 மில்லியனாகக் காணப்பட்டது. சுற்றாடல் துறையிலள்ள முதலீடுகள் சுற்றாடல் பாதுகாப்பு, கழிவு முகாமைத்துவம் மற்றும் மாசடைவுக் கட்டுப்பாடு ஆகிய மூன்று கொள்கைப் பகுதியின் கீழும் மேற்கொள்ளப்பட்டன. இந்தச் சூழ்நிலையில் சுற்றாடல் பாதுகாப்புக்காக ரூபா 526 மில்லியனும், கழிவு முகாமைத்துவத்திற்காக ரூபா 354 மில்லியனும்,மாசடைவுக் கட்டுப்பாட்டுக்காக ரூபா 136மில்லியனும் செலவிடப்பட்டது.

அட்டவணை 2.3
துறைரீதியில் மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவினம் 2012

ரூபா மில்

துறை	2012 வரவு செலவுத்திட்டம்			2012 உண்மையானது					%
	மீண்டடெழும்	மூலதனம்	மொத்தம்	மீண்டெழும்	%	மூலதனம்	%	மொத்தம்	
மனித வள அபிவிருத்தி	190,385	55,184	245,569	185,334	97	35,939	65	221,273	90
போக்குவரத்து	17,037	212,913	229,950	16,353	96	201,702	95	218,055	95
மின்வலு மற்றும் சக்தி	1,175	33,227	34,402	553	47	32,213	97	32,766	95
நீர்ப்பாசனம்	6,670	35,800	42,470	6,559	98	30,240	84	36,799	87
நீர் வழங்கல் மற்றம் துப்புரவேற்பாடு	172	35,541	35,713	169	98	31,173	88	31,342	88
வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி	750	5,173	5,923	708	94	3,318	64	4,026	68
பிராந்திய அபிவிருத்தி	10,441	99,914	110,355	10,357	99	80,890	81	91,247	83
தேசிய பாதுகாப்பு மற்றும் சட்ட அமுல்படுத்துகை	222,764	15,660	238,424	221,715	100	15,302	98	237,017	99
சமூகப் பாதுகாப்பு	145,213	2,562	147,775	144,281	99	1,637	64	145,918	99
மெய்ப் பொருளாதாரம்	46,957	17,143	64,100	46,258	99	11,995	70	58,253	91
சேவைப் பொருளாதாரம்	67,384	31,230	98,614	62,966	93	21,268	68	84,234	85
தொழில்நுட்ப அபிவிருத்தி	12,378	4,836	17,214	12,143	98	3,179	66	15,322	89
சுற்றாடல்	2,036	4,973	7,009	1,948	96	2,234	45	4,182	60
மொத்தம் *	**723,362**	**554,156**	**1,277,518**	**709,344**	**98**	**471,090**	**85**	**1,180,434**	**92**

* கடன்தீர்ப்பு நீங்கலாக

குறிப்பு : திறைசேரி வடிவமைப்புக்கு இணங்க அபிவிருத்தி செய்யப்பட்ட துறைகள்

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

2.6 அரசாங்க நலன்புரிக் கொடுப்பனவுகள் மற்றும் அபிவிருத்தி உதவுதொகைகள் மீதான செலவினம்

சமநிலையான பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கு நாட்டின் தெளிவான பொறுப்பைக் கொண்டுள்ளவர்கள் என்றவகையில் சமுதாயத்தின் அநாதரவானவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் நலன்புரிக் கொடுப்பனவு அபிவிருத்தி உதவுதொகைகளின் தொடர்வதற்கான தேவையை அரசாங்கம் உணர்ந்துள்ளது. அதற்கேற்ப 2012 ஆம் ஆண்டில் சுமார் ரூபா 205 பில்லியன் நலன்புரிக் கொடுப்பனவுகள் மற்றும் அபிவிருத்தி உதவு தொகைகளை உள்ளடக்கிய அரசாங்கத்தின் முழுமையான உதவுதொகை நிகழ்ச்சித் திட்டத்தின் மீது செலவிடப்பட்டது. இது அநேகமாக 2012 இல் மேற்கொள்ளப்பட்ட மொத்த அரசாங்க செலவினத்தில் ஐந்தில் ஒரு மடங்காகும். 2012 இல் நலன்புரிக் கொடுப்பனவுகள் மற்றும் அபிவிருத்தி உதவு தொகைகள் மீதான செலவினத்தின் பரம்பலை அட்டவணை 2.4 காட்டுகின்றது.

அட்டவணை 2.4
நலன்புரி கொடுப்பனவுகள் மற்றும் அபிவிருத்தி உதவுதொகை மீதான செலவினம் - 2012

துறை	2012		பயன்பாட்டு %	மொத்தம் % (உண்மை யான)	மொத்தம் % (உண்மை யான
	ஏற்பாடுரூ பா மில்.	உண்மை ரூபா மில்.			
நலன்புரி கொடுப்பனவு					
சுகாதாரமும் போஷாக்கும்	**19,115**	**18,439**	**96,46**	**9.01**	**10.97**
சிறுவர்களுக்கான பசும்பால	240	205	85.42	0.10	0.12
அரசாங்க வைத்தியசாலைகளுக்கான மருந்து வழங்கல்	17,000	16,796	98.80	8.21	10.00
திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம்	1,575	1,189	75.49	0.58	0.71
போசன மல்ல (போசாக்கு பொதி)	300	249	83.00	0.12	0.15
கல்வி	**7,775**	**7,110**	**91.45**	**3.47**	**4.23**
இலவசப் பாடநூல்	2,400	2,055	85.63	1.00	1.22
பாடசாலை சீருடைகள்	230	230	100.00	0.11	0.14
பாடசாலை பருவச்சீட்டு	1,233	1,233	100.00	0.60	0.73
அங்கவீனமுற்ற மாணவர்கள்	18	17	94.44	0.01	0.01
புலமைப்பரிசில்	230	230	100.00	0.11	0.14
பாடசாலை போஷாக்குணவு நிகழ்ச்சித்திட்டம்	2,792	2,790	99.93	1.36	1.66
அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடை, பாடநூல்	391	233	59.59	0.11	0.14
அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலகக் கொடுப்பனவு	463	305	65.87	0.15	0.18
வாழ்க்கைத் தொழில் / தொழிநுட்ப மாணவர்கள் மாதாந்த கொடுப்பனவு, பாடசாலை பருவச்சீட்டு	18	17	94.44	0.01	0.01
சமூக நலன்புரி	**138,913**	**140,248**	**100.96**	**68.53**	**83.47**
சமுர்த்தி நிவாரணமும் மண்ணெண்ணையும்	10,600	10,553	99.56	5.16	6.28
அங்கவீனமுற்ற படையினருக்கான உதவிகள்	13,700	14,779	107.88	7.22	8.80
உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர் களுக்கான உதவி	54	54	100.00	0.03	0.03
உலக உணவுத்திட்ட உதவி	2,590	2,447	94.48	1.20	1.46
வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணம்	170	153	90.00	0.07	0.09
ஆட்களுக்கான புனர்வாழ்வு	112	108	96.43	0.05	0.06
அங்கவீன முற்றோருக்கான தேசிய பேரவைச் செயலகம்	404	403	99.75	0.20	0.24
சனைகச நிகழ்ச்சித்திட்டம் (போஷன மன்பெத்த)	20	13	65.00	0.01	0.01
முதியோருக்கான தேசிய செயலகம்	63	56	88.89	0.03	0.03

துறை	2012		பயன்பாட்டு %	மொத்தம் % (உண்மையான)	மொத்தம் % (உண்மையான
	ஏற்பாடுரூபா மில்.	உண்மை ரூபா மில்.			
ஓய்வூதியம்	111,200	111,682	100.43	54.57	66.47
ஏனைய	**2,819**	**2,233**	**79.21**	**1.09**	**1.33**
சமய தாபனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கான நீர் மானியம்	49	49	100.00	0.02	0.03
வீதி விளக்குகள்	586	-	-	-	-
வருமானமீட்டாத பாதைகளுக்கான இ.போ.ச. மானியம்	2,184	2,184	100.00	1.07	1.30
மொத்தம் - நலன்புரி உதவுதொகைகள்	**168,622**	**168,030**	**99.65**	**82.10**	**100.00**
அபிவிருத்தி உதவு தொகைகள்					
விவசாயத்துக்கான மானியம்	**37,343**	**36,628**	**98.09**	**17.90**	**100.00**
உர மானியம்	37,000	36,456	98.53	**16.44**	**67.79**
விவசாய கடன்களுக்கான வட்டி மானியம்	343	172	50.15	0.08	0.**32**
தொழிற்பாட்டு நட்டங்கள்	-	-	-	-	-
இலங்கைப் புகையிரதம்	4,516	3,797	**84.08**	**1.71**	**7.06**
இலங்கைப் போக்குவரத்துச் சபை	-	9,972	-	**4.50**	**18.54**
தபால் திணைக்களம்	3,171	3,381	**106.62**	**1.52**	**6.29**
மொத்தம்–அபிவிருத்தி உதவு தொகைகள்	**37,343**	**36,628**	**98.09**	**17.90**	**100.00**
மொத்தம் - நலன்புரிக் கொடுப்பனவுகளும் அபிவிருத்தி உதவுதொகைகளும்	**205,965**	**204,658**	**99.37**	**100.00**	

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

நலன்புரி மற்றும் உதவு தொகைகள்

செலவினத்தின் இந்த வகையானது பிரதானமாக கல்வி, சுகாதாரம், விவசயாம், போக்குவரத்து மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் ஆகியவற்றுக்கான உதவு தொகைகளை உள்ளடக்குகின்றது. 2012 இல் மொத்த மீண்டுவரும் செலவினத்தில் 20.8 சதவீதத்திற்கு இது கணக்குக் கூறியது. 2009 – 2012 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சராசரி செலவினத்துடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் இது 14.4 சதவீத அதிகரிப்பாகும். 2012 இல் இந்த அதிகரிப்புக்கான பிரதான காரணம் ஓய்வூதியங்கள் மற்றும் நலன்புரி உதவியில் ஏற்பட்ட அதிகரிப்பாகும். சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்புரிச் செலவுகள் காயமடைந்த மற்றும் மரணமடைந்த பாதுகாப்பு ஆளணியினரின் ஓய்வூதியம் மற்றும் நலன்புரி உதவியின் மீதான செலவு ரூபா 172 பில்லியன் ஆகும். அது 125 பில்லியனுக்கு கணக்குக் கூறியது. எஞ்சியவை பாதுகாப்புப் படைகளில் ஊழியர்களின் பெற்றோர்களுக்கான புதிய நலன்புரி திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் காரணமாக இலவச மருத்துவ வழங்கல் சமுர்த்தி பண மானியங்கள் மற்றும் ஏனைய நலன்புரி உதவிக்காக செலவிடப்பட்டது. 70 வயதிற்கு மேற்பட்ட முதியோருக்கான வருமான ஒத்துழைப்பு மற்றும் தற்போது இடம்பெற்று வரும் சமுர்த்தி பணக் கொடுப்பனவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு செய்யப்பட்ட சரிசெய்தல்கள் காரணமாக செலவினம் 11.4 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

மீனபிடி, விவசாயம் மற்றும் ஏனைய பகுதிகளுக்காக வழங்கப்பட்ட உதவுதொகைகள் ரூபா 48 பில்லியன் ஆகும். இதில் ரூபா 36 பில்லியன் உரமானிய உதவுதொகைக்கானதாகும். 2011 இல் காணப்பட்ட அத்தகைய செலவினத்துடன் ஒப்பிடும் போது 12 சதவீத வளர்ச்சிக்கு விவசாயத்துறை உதவுதொகை சான்று பகர்கின்றது. போக்குவரத்து துறை கூட புகையிரத திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஆகியவற்றின் தொழிற்பாட்டுச் செலவுகளை ஈடுசெய்வதற்கு உதவுதொகையின் குறிப்பிடத்தக்களவு தொகையை எடுத்துக் கொண்டது.

2.7 2012 வரவு செலவுத்திட்டத்தின் முகாமை

2.7.1அரசாங்க கணக்குகளின் பிரகாரம் வருமானமும் செலவிமும்

2012 ஆம் ஆண்டில் பதிவாகிய ரூபா 1,575 பில்லியன் அரசாங்க செலவினம் முன்னைய வருடத்திலும் பார்க்க 8 சதவீத அதிகரிப்பாகும். ரூபா 1,131 பில்லியன் வரையிலான மொத்த மீண்டுவரும் செலவினம் 10.3 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளையில்2011 ஆம் ஆண்டில் காணப்பட்டமொத்தத் தெசிய உற்பத்தியின் 15.7 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 14.9 சதவீதத்திற்குக் கணக்குக் கூறியது. ரூபா 408 பில்லியனுக்குக் கணக்குக் கூறிய வட்டிச் செலவினம் மீண்டுவரும் செலவினத்தின் 14.9 சதவீதத்திற்குக் கணக்குக் கூறியது. அது மொத்தத் தேசிய உற்பத்தியின் 5.4 சதவீதமாகவும் பெரும்பாலும் கடந்த வருடத்திற்குச் சமனானதாகவும் இருந்தது. ரூபா 1,167 பில்லியனாகக் காணப்பட்ட வட்டி அல்லாத அரசாங்க செலவினம் 2011 ஆம் ஆண்டில் காணப்பட்ட மொத்தத் தெசிய உற்பத்தியின் 16.7 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 15.4 சதவீதத்திற்குக் கணக்குக் கூறியது. ரூபா 1,131 பில்லியன் வரையிலான முன்னேற்றத் தொகையில் காணப்பட்ட அரசாங்க முதலீட்டின் ஆதரவிலுள்ள வருடாந்த மூலதனச் செலவினம் 2012 இல் 5.1 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. அதற்கேற்ப அது மொத்தத் தேசிய உற்பத்தியின் 5.9 சதவீதமாகும். அரசாங்க முதலீட்டின் பெரும் பகுதி 2011 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 213 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 267 தொகை வரையில் பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு ஆதரவளித்தது.

அட்டவணை2.5: மொத்தத் தேசிய உற்பத்தியின் மொத்தத் தேசிய உற்பத்தியின் அரசாங்க செலவினத்தின் மாதிரி

விடயம்	2005-2007	2008-2010	2011-2013	2014-2016 (மதிப்பிடப்பட்ட)
மொத்தச் செலவினம்	24.2	23.7	21.2	20.8
மீண்டுவரும்	18.0	17.3	15.1	14.5
மூலதனம்	6.2	6.4	6.1	6.3

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்க

வரைபு2.5: அரசாங்க செலவினத்தின் கட்டமைப்பு, 2012

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்



சம்பளங்களும் கூலிகளும்

மாகாண சபைகள் மற்றும் பாதுகாப்பு சேவைகளில் உள்ளவர்கள் உட்பட அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் 2011 இல் காணப்பட்ட 6.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும் போது 2012 ரூபா 348 பில்லியன் வரையில் 8.8 வீதத்தினால் அதிகரித்தது. அத்துடன் அது மொத்த மீண்டு வரும் செலவினத்தில் 30.7 சதவீதத்திற்கு பங்களிப்புச்

செய்துள்ளது. இந்த அதிகரிப்பு பிரதானமாக 2012 சனவரி முதல் பதவி நிலையல்லாத தரத்தைச் சேர்ந்தவர்களுக்காகவும் 2012 யூலை முதல் பதவிநிலை தரத்தைச் சேர்ந்தவர்களுக்காகவும் அவர்களுடைய அடிப்படை சம்பளத்தில் 10 சதவீதத்திற்கு சமமான விசேட சம்பளக் கொடுப்பனவு ஒன்றையும் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் ஏற்பாடு செய்ததன் விளைவின் காரணமாக ஏற்பட்டதாகும். அரசாங்கத் துறை சம்பளங்கள் பின்வருமாறு விரிவடைந்துள்ளன.

அட்டவணை2.6: தேசிய மற்றும் மாகாண அரசாங்க சேவைகளின் சம்பளச் செலவின் பரம்பல்

ரூபா மில்லியன்

துறை	தேசிய	மாகாண	மொத்தம்
கல்வி	15,812	52,489	68,301
சுகாதாரம்	32,104	20,952	53,056
சிவில் நிருவாகம்	31,237	10,343	41,575
பொருளாதார மற்றும் சமூக சேவைகள்	16,817	4,433	21,250
தேசிய பாதுகாப்பு	163,565	-	163,565
மொத்தம்	**259,530**	**88,217**	**347,747**

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

2012 ஆம் ஆண்டு அரசாங்க சேவைகளில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் அதிகரிக்கப்பட்டமைக்கு கிராம உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்துக் கொடுப்பனவு திருத்தம் நீதிச் சேவை உறுப்பினர்களுக்கான சாரதிகளின் கொடுப்பனவு வைத்தியர்களுக்கான உடனடி அழைப்புக் கொடுப்பனவு பொறியியலாளர்களுக்கான கள விஜயம் மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவு பல்கலைக்கழகத்தின் கல்வி சார்ந்த மற்றும் கல்வி சாராத பதவியினருக்கான சம்பள சரிசெய்தல்கள் என்பன ஏனைய பங்களிப்புத் துறைகளாகும். இது அரசாங்கத் துறைக்கு 2011 - 2012 காலப் பகுதியில் 50,000 மேற்பட்ட எண்ணிக்கையிலான பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதன் காரணமாக மேலும் அதிகரித்துள்ளது.

தாபனச் செலவு

எரிபொருள், மின்சாரம், போக்குவரத்து, பயணச்செலவு மற்றும் கட்டட வாடகை போன்ற பயன்பாடுகளுக்காகவும் சேவைகளுக்காகவுமான அரசாங்கத்தின் தாபனச் செலவு மீதான செலவினத்தின் பங்கு செலவினத்தின் பொருளாதார வெளிப்படுத்தலில் 8.9 சதவீதமாகக் காணப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் அந்த செலவினத்துடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் 6 சதவீத வளர்ச்சியிலிருந்து ஓரளவு அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் தாபனச் செலவின் மொத்த அதிகரிப்பு நாடுமுழுவதிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் துரிதமான செயற்படுத்தல் எரிபொருள் மின்சாரம் மற்றும் போக்குவரத்து ஆகியவற்றுக்கான அதிகூடிய விலை மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான விரிவாக்கப்பட்ட வசதிகள் பெருந் தொகையான அரச ஊழியர்களின் காற்று சீராக்கி மற்றும் இடவசதி என்பவற்றின் காரணமாக ஏற்பட்டதாகும்.

இடமாற்றங்கள் மற்றும் உதவு தொகைகள்

செலவினத்தின் இந்த வகையானது பிரதானமாக கல்வி, சுகாதாரம், விவசயாம், போக்குவரத்து மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் ஆகியவற்றுக்கான உதவு தொகைகளை உள்ளடக்குகின்றது. 2012 இல் மொத்த மீண்டுவரும் செலவினத்தில் 20.8 சதவீதத்திற்கு இது கணக்குக் கூறியது. 2009 – 2012 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சராசரி செலவினத்துடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் இது 14.4 சதவீத அதிகரிப்பாகும். 2012 இல் இந்த அதிகரிப்புக்கான பிரதான காரணம் ஓய்வூதியங்கள் மற்றும் நலன்புரி உதவியில் ஏற்பட்ட அதிகரிப்பாகும். சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்புரிச் செலவுகள் காயமடைந்த மற்றும் மரணமடைந்த பாதுகாப்பு ஆளணியினரின் ஓய்வூதியம் மற்றும் நலன்புரி உதவியின் மீதான செலவு ரூபா 172 பில்லியன் ஆகும். அது 125 பில்லியனுக்கு கணக்குக் கூறியது. எஞ்சியவை பாதுகாப்புப் படைகளில் ஊழியர்களின் பெற்றோர்களுக்கான புதிய நலன்புரி திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் காரணமாக இலவச மருத்துவ வழங்கல் சமுர்த்தி பண மானியங்கள் மற்றும் ஏனைய நலன்புரி உதவிக்காக செலவிடப்பட்டது. 70 வயதிற்கு மேற்பட்ட முதியோருக்கான வருமான ஒத்துழைப்பு மற்றும் தற்போது இடம்பெற்று வரும் சமுர்த்தி பணக் கொடுப்பனவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு செய்யப்பட்ட சரிசெய்தல்கள் காரணமாக செலவினம் 11.4 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

மீனபிடி, விவசாயம் மற்றும் ஏனைய பகுதிகளுக்காக வழங்கப்பட்ட உதவுதொகைகள் ரூபா 48 பில்லியன் ஆகும். இதில் ரூபா 36 பில்லியன் உரமானிய உதவுதொகைக்கானது ஆகும். 2011 இல் காணப்பட்ட அத்தகைய செலவினத்துடன் ஒப்பிடும் போது 12 சதவீத வளர்ச்சிக்கு விவசாயத்துறை

உதவுதொகை சான்று பகர்கின்றது. போக்குவரத்து துறை கூட புகையிரத திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஆகியவற்றின் தொழிற்பாட்டுச் செலவுகளை ஈடுசெய்வதற்கு உதவுதொகையின் குறிப்பிடத்தக்களவு தொகையை எடுத்துக் கொண்டது.

தேசிய வரவு செலவுத்திட்டத்திலிருந்து மீண்டு வரும் மற்றும் மூலதன செலவினத்திற்காக மாகாண சபைகளுக்கான அரசாங்கத்தின் மாற்றல்கள் மீண்டுவரும் செலவினத்திற்கான தடையுறு மானியங்களின் அடிப்படையிலும் மூலதனச் செலவினத்திற்காக தகுதிறன் அடிப்படையிலான மானியங்கள் மற்றும் விசேட மாகாண அபிவிருத்தி மானியங்கள் அடிப்படையிலும் நீடிக்கப்பட்டன.

2.7.2 அரசாங்க செலவின முகாமை

திறைசேரி, திறைசேரி ஆதரவு சேவைகள் மற்றும் பின்னிகழும் கடன் பொறுப்புக்கள் (திறைசேரி நானாவித செலவினம் -TMV) ஆகியவற்றினால் விவேகமுள்ள அரசாங்க செலவின முகாமைத்துவத்திற்காக வருட காலப் பகுதியில் எதிர்பாராத பல்வேறு அவசரத் தேவைகளை முகாமை செய்வதற்கு குறைநிரப்பு வரவு செலவைத் தவிர்ப்பதற்கான பிரதான ஒரு கருவியாகும்.

முன்னைய போக்கின் அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் வேளையில் திரட்டப்பட்ட ஒரு எடுக்கப்படும் இந்தக் கருவி செலவினத்தின் ஒரு பகுதியாகஅத்தகைய ஒரு ஏற்பாட்டைஅங்கீகரிப்பதற்கு திறைசேரிக்கு இயலச் செய்துள்ள அதேவேளையில், அதற்கேற்ப வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் ஏனையஇலக்குகள் திட்டமிடப்படுகின்றது. அத்தகைஏற்பாடுகளை மேற்பார்வை செய்வதானதுஅரசிறை இலக்குகளில் கடுமையான செல்வாக்கைச் செலுத்துவதற்கும் குறித்த காரியத்திற்காக அமைக்கப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும்.

2.7.3 ஈடுபாட்டுப் பொறுப்புக் கட்டுப்பாடு

அரசிறை மற்றும் அபிவிருத்திப் பெறுபேறுகளை பணமாக்குவதற்குஒரு சிறந்த அரசாங்க நிதி முகாமைத்துவம் தேவைப்படுகின்றது. திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெறும் வரவு செலவு ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடல் மற்றும் உறுதிப்படுத்தல் இன்றி பல்வேறு செலவிடும் முகவர்களினால் ஈடுபாட்டுப் பொறுப்பு நுழைவிக்கப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் திட்டமிட்டு, அதற்கேற்ப அத்தகைய செலவினங்களுக்கு முன்னுரிமையளிப்பதற்கு இடைக்கால வரவு செலவு தயாரிப்பு நடவடிக்கை விருத்தி செய்யப்பட்டுள்ளது. செலவினத் திட்டங்கள் வரவு செலவு எல்லைக்குள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை உறுதி செய்வதற்கு செலவிடும் முகவர்களுக்கும் திறைசேரிக்கும் இடையில் மிகப் பெரிய கூட்டிணைப்பு தேவைப்படுகின்றது. அதற்கேற்ப, கட்டுநிதிக் கட்டப்பாட்டு முறைமைகளைப் பயன்படுத்துவதற்கு மேலதிகமாக மேம்படுத்தப்பட்ட அரசாங்க நிதி முகாமைத்துவத்தை உறுதி செய்வதற்கு இடைக்கால வரவு செலவுத் திட்டம், பெறுகை வட்டம், ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் நிதிக் கொடுக்கல்கள் போன்றவற்றில் உள்ள ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஈடுபாட்டுப் பொறுப்புக் கட்டுப்பாடு ஏற்கப்பட்டு செயல்முறைப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவைத் தாண்டாமல் குறிப்பாக மீண்டவரும் செலவினத்தை உறுதிப்படுத்துவதற்கு 2012.06.12 ஆம் திகதிய 156 ஆம் இலக்க வரவு செலவுச் சுற்றுநிருபத்தினூடாக எரிபொருளின்/ மின்சாரத்தின் செலவினத்தின் முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டது. உயர்வான சர்வதேச விலைகள் மற்றும் இறக்குமதிச் செலவுகள் ஆகிய சூழ்நிலையில் எண்ணெய் விலைகள் மற்றும் மின்சாரக் காப்புவரி ஆகியவற்றின் திருத்தத்தை நோக்காகக் கொண்டு எரிபொருளையும் மின்சாரத்தையும் சிக்கனமாக நுகர்வதற்கு முன்னுரிமை அளிப்பதற்கு முழுமையான ஒத்தழைப்பை வழங்குவதற்கு சகல அரசாங்க நிறுவனங்களினதும் தேசிய பொறுப்பை உணர்ந்து இந்தச் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது. இந்த விலைகளை அதிகரிப்பதில் எதிர்பார்க்கப்பட்ட பிரதான நோக்கம் சகதிவலுவைப் பிறப்பிப்பதற்காக எண்ணெய் இறக்குமதிக்கு வருடாந்தம் செலவிடப்பட்டு வரும் அந்நியச் செலாவணியின் அளவைக் குறைப்பதாகும். அதனால் அரசாங்க சேவை வழங்கல் நடவடிக்கையில் அத்தகைய செலவினத்தை சிக்கனமாக்குவது தவிர்க்கமுடியாததாகும்.

அதற்கேற்ப,சகல செயலாளர்களும் தமது ஆட்புல எல்லைக்குள் தொழிற்படுகின்ற நிறுவனங்கள் எரிபொருளிள் மற்றும் மின்சாரத்தின் மீதான செலவினத்தை மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடுகளுக்குள், அத்தகைய ஏற்பாடுகளைத் தாண்டாமல் 2012 சனவரியில் இந்த விடயங்களுக்கான செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு முகாமை செய்யப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பானவர்கள் ஆவர். இந்த நோக்கத்திற்காக சகல அரசாங்க நிறுவனங்களும் நாளாந்த அலுவலக முகாமைத்துவம், வெளிக்கள வேலைகள்,

கருத்தரங்குகள்,செயலமர்வுகள் போன்றவற்றிற்காகப் பயன்படுத்தப்பட்டுவரும் குழுமத்திலுள்ள வாகனங்களின் எண்ணிக்கையின் பயன்பாட்டைக் குறைப்பதனை உறுதிப்படுத்த வேண்டியிருந்தது.

2.7.4 வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கைகளை வெளியிடுதல்

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டதுடன் இவற்றின் மூலம் செலவின முகவராண்மைகளின் செலவினம் மற்றும் பதவியணி, முகாமைத்துவம் என்பவற்றுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கக் கூடியதாக இருக்கின்றது.

16.02.2012	156	எரிபொருள்/ மின்சார செலவினங்களை முகாமை செய்தல்
28. 12.2012	157	2013 இற்காக ஏற்படும் செலவினத்திற்காகவும் அரசாங்க செலவின முகாமைக்காகவும் அதிகாரமளித்தல்.

2.7.5 குறைநிரப்பு மதிப்பீடுகள்

2012 ஆம் ஆண்டு முதல் அரசாங்கமானது, எந்தவொரு குறைநிரப்பு மதிப்பீடுகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். அத்துடன்அங்கீகரிக்கப்பட்ட செலவின மட்டத்திற்குள் மேற்கொள்ளப்பட்டதுடன் வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவிதப் பொறுப்புக்கள்/திறைசேரி நானாவித தலைப்பு என்பதன் கீழ் செயற்படுத்தப்பட்டது.வெள்ளம் போன்ற எதிர்பாராத நிகழ்வுகளுக்காக நிதியினை வழங்க வேண்டியிருந்த அதேவேளை, பிரதான அபிவிருத்தி முன்னெடுப்புகளில் முகாமை செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்திற்குள் நிதியினை மீள ஒதுக்கீடு செய்வதற்கு பாராளுமன்றத்தில் குறைநிரிப்பு மதிப்பீடொன்றினை சமர்ப்பிக்காது திறைசேரி நிர்ப்பந்திக்கப்பட்ட விஷேட வருடமொன்றாக 2012 ஆம் ஆண்டு காணப்படுகிறது.

மேலதிகமாக தேவைப்பட்ட ஏற்பாடுகளில் ரூபா 7.9 பில்லியன் மீண்டெழும் செலவினமாகவும் ரூபா 64 பில். மூலதனச் செலவினமாகவும் காணப்பட்டதுடன், இது தெரிவுசெய்யப்பட்ட செலவின முகவராண்மைகளின் கீழ் இனங்காணப்பட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் பயன்படுத்தப்படாத நிதியினைக்கொண்டு திறைசேரி நானாவித தலைப்பின் மூலம் செலவிடப்பட்டது. இந்த மீள் ஒதுக்கீட்டின் மூலம் இந்த மேலதிக நிதியினை வழங்கி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த மதிப்பீட்டின் உண்மையான செலவினம் அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளுக்குள் மொத்த மதிப்பீட்டில் பேணப்பட்டதுடன் 2012 வரவு செலவுத்திட்ட பெறுகை வரையறைகளும் பேணப்பட்டது.

3.2 2012 திறைசேரியின் நானாவித பொறுப்புக்களின் செலவு விடயத்தின் நிலைப்பாடு

2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவித பொறுப்புக்களின் மொத்த மதிப்பீடு ரூபா 72.9 பில்லியனாக காணப்பட்டதுடன் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டதுடன் அவற்றுள் ரூபா 51.8 பில்லியன் மீண்டெழும் செலவினமாகவும் ரூபா 21.1 பில்லியன் மூலதனச் செலவினமாகவும் காணப்பட்டது.

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரியின் நானாவித பொறுப்புக்களின் செலவு விடயத்தினூடாக வழங்கப்பட்ட மேலதிக ஏற்பாடுகளின் தொகையான ரூபா 71.89 பில்லியன் செலவினத் தலைப்புகளுக்கு மாற்றப்பட்டன. அதில் ரூபா 32.22 பில்லியன் மீண்டுவரும் செலவினமாகவும் ரூபா 39.67 பில்லியன் மூலதனச் செலவினமாகவும் இருந்தது. இந்த ஏற்பாடுகளில் விசேடமாக ரூபா 22.1 பில்லியன் 2012 ஆம் ஆண்டக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் செயற்படுத்துகைக்கானதாகும்.

2.7.5.1 2012 திறைசேரியின் நானாவித பொறுப்புக்களின் செலவு விடயத்தின் நிலைப்பாடு

2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவித பொறுப்புக்களின் மொத்த மதிப்பீடு ரூபா 72.9 பில்லியனாக காணப்பட்டதுடன் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டதுடன் அவற்றுள் ரூபா 51.8 பில்லியன் மீண்டெழும் செலவினமாகவும் ரூபா 21.1 பில்லியன் மூலதனச் செலவினமாகவும் காணப்பட்டது.

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரியின் நானாவித பொறுப்புக்களின் செலவு விடயத்தினூடாக வழங்கப்பட்ட மேலதிக ஏற்பாடுகளின் தொகையான ரூபா 71.89 பில்லியன் செலவினத் தலைப்புகளுக்கு மாற்றப்பட்டன. அதில் ரூபா 32.22 பில்லியன் மீண்டுவரும் செலவினமாகவும் ரூபா 39.67 பில்லியன் மூலதனச் செலவினமாகவும் இருந்தது. இந்த ஏற்பாடுகளில் விசேடமாக ரூபா 22.1 பில்லியன் 2012 ஆம் ஆண்டக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் செயற்படுத்துகைக்கானதாகும்.

2.8 முற்பணக் கணக்குகளின் கண்காணிப்பு

வழமை போன்று 2012 ஆம் ஆண்டிலும் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்ய முடியுமாக இருந்தது. 189 அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள்,4 வர்த்தக முற்பணக் கணக்குகள் 3 களஞ்சிய முற்பணக் கணக்குகள் மற்றும் 4 விசேட முற்பணக் கணக்குகள் உள்ளடங்களாக முற்பணக் கணக்குகளின் தொழிற்பாடுகளுக்கு ரூபா 18,070 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. முற்பணக் கணக்கு எல்லைகளைத் தீர்மானித்தல், இவ்வெல்லைகளின் திருத்தக் கண்காணிப்பு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் தொடர்பான பின்னூட்டல் செயற்பாடுகள் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டன. 2012 ஆம் ஆண்டின் போது 21 கணக்குகள் அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகளாக இருந்ததுடன் 07கணக்குகள் ஏனையவையாகவும் இருந்தன. முற்பணக் கணக்குகளின் எல்லைகளுடன் இணக்கப்பாடின்மை, விஸ்தரிப்புச் செயற்பாட்டின் முன்னேற்றம் மற்றும் வர்த்தகம் விஸ்தரிப்புச் செய்யப்பட்ட முற்பணக் கணக்குகளின் அதிகாரமளிக்கப்படாத செயற்பாட்டு நுட்பங்களின் வழக்குகள் பரீட்சிப்புகள் நடைபெற்ற அரச கணக்குகள் குழுக்கூட்டத்தில (COPA)திணைக்கள அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

3. 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்

2013இற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் இலங்கையினை ஆசியாவின் அதிசயமிக்க ஒரு நாடாக மாற்றும் அரசாங்கத்தின் பொறுப்புடைமையினை எடுத்துக் காட்டுவதாகக் காணப்பட்டது. 2013 வரவு செலவுத்திட்டம் 2006 இல் ஆரம்பிக்கப்பட்ட எட்டு வருட நடுத்தரக்கால செலவின வேலைச் சட்டகத்தினை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. பிராந்திய ரீதியில் சமமான அபிவிருத்தியினை உறுதிப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தப்பட்ட மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்களினூடாக நாடளாவிய ரீதியில் பொருளாதார செயற்பாடுகளை மீளக் கட்டியெழுப்புதலும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் கிராமிய உட்கட்டமைப்புகளை விருத்தி செய்யும் அதே வேளை உட்கட்டமைப்பு கருத்திட்டங்களை துரிதப்படுத்துவது பிரதான நோக்கமாகக் காணப்பட்டது.

3.1 வரவு செலவுத்திட்ட தயாரிப்பு வழிகாட்டல்கள்

2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக நிலையான வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டிருக்கவில்லை. அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் 2013 ஆம் ஆண்டுக்கான தமது மதிப்பீகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்கும் வகையில் தனிப்பட்ட வகையில் கடிதங்களின் மூலம் திறைசேரி செயலாளரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன். இது தேவையான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியிருந்தது. 2013ஆம் ஆண்டிற்கான வரைவு மதிப்பீடு 2012.12.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.

2013 வரவு செலவுத்திட்டத்தினை தயாரிப்பதில் செலவின வகுதிகளுக்காக பின்வரும் குறிப்பீடு செய்யப்பட்ட வழிகாட்டல்கள் கவன்திற்கொள்ளப்பட்டன.

மீண்டெழும் செலவினம்–2012 யூன் 30 ஆந் திகதியன்றுள்ளவாறு பணியாளர்களின் உண்மையான எண்ணிக்கையின் அடிப்படையில் சம்பளங்கள், கூலிகள் மற்றும் பிற கொடுப்பனவுகள் தயாரிக்கப்பட்டதுடன் 2013 இற்கான அங்கீகரிக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்புக்கான செலவினமும் வேறாக இனம் காணப்பட்டது.

மூலதனச் செலவினம்

- புதிய கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்க முன்னர் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட மூலதனக் கருத்திட்டங்களை நிறைவு செய்வதற்கு முன்னுரிமை வழங்குதல்.

- 2012.08.01 ஆம் திகதி அமைச்சரவை மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தால் மாத்திரமே புதிய கருத்திட்டங்களை சேர்த்துக்கொள்ளல்.

- துறைரீதியான ஒதுக்கீடுகள் மற்றும் முறையான பகிர்வு செய்தலினை உறுதிப்படுத்துவதற்கு செலவின முகவராண்மைகள் மற்றும் மாகாண சபைகளினால் முன்னெடுக்கப்பட்ட

கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் இரட்டை மற்றும் மேற்படிவு செயற்பாடுகளைத் தவிர்த்தல்.

- இறக்குமதி தீர்வைகள் மற்றும் வரிகளின் எதிர்காலத் தேவைகள் மற்றும் நிலுவையில் உள்ள பொறுப்புக்களுக்குத் தேவையான யதார்த்தமான ஏற்பாடுகளைத் தயாரித்தல்.

திணைக்களமானது 2012 வரவு செலவுத்திட்டம் மீது மீளாய்வொன்றினை மேற்கொண்டதுடன் மதிப்பீடு மற்றும் அமைச்சுக்கள் வாரியான வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரித்தல் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. 2012 ஆகஸ்ட் நடுவாண்டில் 2013 இற்கான குறியீட்டு மதிப்பீடுகளை ஒவ்வொரு அமைச்சுக்கும் திணைக்களம் அனுப்பிவைத்ததுடன் அம்மதிப்பீடுகளை பயன்படுத்துவதற்கான ஊகங்களைச் சுட்டிக்காட்டும் விபரமான கடிதமும் அனுப்பப்பட்டது. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைச்சுக்கள் 2012 செப்தெம்பர் மாதம் அளவில் அவற்றுக்கான வரைவு மதிப்பீடுகளை சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டிருந்தன.

4. விசேட செயற்பாடுகள்

4.1 வர்த்தகமற்ற அரச தொழில் முயற்சிகளின் வரவுசெலவுத் திட்ட முகாமை

தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களமானது 2012 ஆம் ஆண்டின்போது 122 வர்த்தகமற்ற அரச தொழில் முயற்சிகளின் நியதிச்சட்ட சபைகள், நிதி மற்றும் வரவு செலவுத்திட்ட முகாமை தொடர்பான அனைத்து விடயங்களையும் மேற்கொண்டு வருகின்றது. இந்த நிறுவனங்களின் தொடர்பான பின்வரும் தொழிற்பாடுகளை அவற்றினது நிதி மற்றும் முகாமைத்துவ திறனை மேம்படுத்துவதற்காக 2012 இல் தேசிய வரவுசெலவுத் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

- வருடாந்த வரவு செலவுத்திட்டம், வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், வருடாந்த கணக்குகள் மற்றும் ஆண்டறிக்கை போன்றவற்றினை மதிப்பீடு செய்வதன் மூலம் நியதிச் சட்ட சபைகளின் செயலாற்றுகையினை மீளாய்வு செய்தல்.
- மீண்டெழும் மற்றும் மூலதன மானிய தேவைப்பாடுகள் மீதான மாதாந்த காசுக்கட்டு நிதியினை விடுவிப்பதற்கான வேண்டுகோள்கள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு பரிசீலனைமற்றும் பரிசீலனை செய்வதுடன் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பித்தலும்.
- 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் நியதிகளுக்கு அமைவாக ரூபா 500,000/- இனை விஞ்சிய மூலதனச் செலவினங்களுக்காக நிதி அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- அரசாங்க தொழில் முயற்சிகள் குழு (COPE) கூட்டங்கள் கூட்டப்படும் பொழுது நியதிச் சட்டசபைகளின் நிதிச் செயலாற்றுகை மற்றும் முகாமைத்ததுவம் தொடர்பில் அறிக்கையொன்றினை தயாரிப்பதற்கு உதவி செய்தலும்.
- வர்த்தக தொழில்முயற்சிகள் அல்லாதவற்றினால் தேவைப்படுத்தப்பட்ட புதிய வாகனங்கள் கொள்வனவிற்கான அங்கீகாரத்தினை வழங்குதல்.
- வர்த்தக தொழில்முயற்சிகள் அல்லாதவற்றின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிதியியற் குத்தகை முறைமையின் கீழ் புதிய வாகனங்களை கொள்வனவு செய்தலும் கையளித்தலும்.
- வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளின் கிடைப்பனவு மற்றும் அத்தகைய நிதி நிறுவனங்களின் உண்மையான தேவை தொடர்பில் நியதிச் சட்ட சபைகளின் புதிய பதவியினரை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பில் வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.
- பல்வேறு நோக்கங்களுக்காக வெள்நாட்டு பயணங்களுக்கு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை வழங்குதல் (பயிற்சி, கூட்டங்கள், செயலமர்வுகள், மாநாடுகள் போன்ற)
- பாரிய மூலதனக் கருத்திட்டங்கள் போன்றவற்றை செயற்படுத்ததல் போன்ற ஏனைய நிதி மற்றும் முகாமைத்துவ விடயங்கள் தொடர்பாக நியதிச்சட்ட சபைகளுக்கு அறிவுரை வழங்குதலும் ஒருங்கிணைத்தல்

அட்டவணை4.1
2012 இன் செயலாற்றுகை

செயற்பாடுகள்	எண்ணிக்கை
1. நிதிச் சட்டத்திற்கமைய மூலதனச் செலவினத்திற்கான அங்கீகாரம	117
2. COPE அறிக்கைகளைத் தயாரித்தல்	109
3. வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரங்கள்.	129
4. மாதாந்த காசு விடுவிப்பு தொடர்பான பரிந்துரைகள்	1,354
5. நிதிக் குத்தகை முறைமையின் கீழ் வாகனம் வழங்கல்	259

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

4.2அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான அவதானிப்புக்கள்

2012 ஆம் ஆண்டின் போது கௌரவ நிதி திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்புகளாக 256 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டது. இத்திணைக்களம் ஏனைய திறைசேரி திணைக்களங்களுக்கான 240 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான கருத்துரைகளை சமர்ப்பித்தது.

4.3 "தேசத்திற்கு மகுடம்" அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை ஒருங்கிணைத்தல் - 2012

ஆரம்ப கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல், செயற்திட்ட செயற்படுத்துகை பிரதேசங்களை இனம்காணுதல் உரிய பிரதேசங்களில் புதிய மற்றும் இடம்பெற்று வரும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை இனம்காணுதல், அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயாரித்தலும் சமர்ப்பித்தலும் தேசிய தொழிற்பாட்டு குழு மற்றும் கொள்வனவுக் குழு என்பவற்றில் பங்குபற்றுதல் அத்துடன் முழுமொத்த நிதி முகாமைத்துவம் போன்ற விடயங்களில் தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை ஒருங்கிணைப்பதில் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் பங்களிப்புச் செய்துள்ளது.

4.4 வாகனங்கள் கொள்வனவுக்கான அங்கீகாரம்

4.4.1 வாகனங்கள் கொள்வனவுக்கான தேசிய வரவு செலவுத்திட்ட அங்கீகாரம்

1990.01.31 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அகமைவாக, அரசாங்க நிறுவனங்களினால் வாகனங்கள் கொள்வனவுக்கான அங்கீகாரத்தினை தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் வழங்கியுள்ளது. இதற்கமைவாக, அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளுராட்சி மன்றங்கள் மற்றும் அனைத்து நியதிச்சட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க உடமைக் கம்பனிகள் என்பவற்றினால் சுயநிதியின் மூலம் அல்லது வேறு ஏற்பாடுகளின் மூலம் வாகனங்கள் கொள்வனவுக்காக அத்தகைய ஏதேனும் கொள்வனவுக்கான குழுவின் முன் அங்கீகாரம் பெறப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. பல்வேறுபட்ட அரசாங்க முகவராண்மைகளினால் வாகனங்கள் கொள்வனவுக்கான வேண்டுகோள்களை தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் தொடர்ந்து மீளாய்வு செய்வதுடன் அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2012 ஆம் ஆண்டின்போது இத்திணைக்களமானது 713 வாகனங்கள் கொள்வவுக்கான அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது.

அட்டவணை 9.1

வாகனங்களின் அடிப்படையில் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால்

அங்கீகா

ரம் வழங்கப்பட்ட வாகனங்கள்

வாகனத்தின் வகை	அங்கீகரிக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை
மோட்டார் கார்கள்	81
வான்கள்	18
பேருந்துகள்	04
சிங்கள்/டபல்/குரூவ் கப்	123

முச்சக்கர வண்டிகள்	49
லொறிகள் /ட்ரக்குகள்	29
மோட்டார் சைக்கிள்கள்	334
நோயாளர் வண்டிகள் (அம்பியூலன்ஸ்கள்)	10
ஜீப்புகள்	-
ஏனையவை (ட்ரக்டர்கள், பெட்டிகள்/நீர் பவுசர்கள் போன்ற)	65
மொத்தம்	**713**

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்.

4.4.2 அரசாங்க முகவராண்மைகளுக்கான வாகனங்கள் கொள்வனவு

நிதியியல் குத்தகை முறைமையின் கீழ் அரசாங்க முகவராண்மைகளுக்கான வாகனங்கள் கொள்வனவு

அரசாங்க முகவராண்மைகளுக்கு வாகனங்களை வழங்குவதில் முகாமைத்துவக் கட்டுப்பாடு மற்றும் வினைத் திறமைக்கான தேவையை அறிந்து 2010.08.30 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் நியதிகளுக்கு அமைவாக அரசாங்க முகவராண்மைகளுக்கு நிதியியற் குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களை வழங்குவதற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதற்கு அமைவாக 2010.12.07 ஆம் திகதிய 150 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தின் மூலம் சட்டமாக்கப்பட்டது. வாகனத்தின் செலவு 05 வருடத்தில் செலுத்தப்பட வேண்டும் இறுதியில் அந்த வாகனம் தொடர்புடைய முகவராண்மையின் சொத்தாக மாறும் என்ற வகையில் பண ஓட்ட முகாமையின் ஒரு பகுதியாக இந்த முறைமை பிரயோகிக்கப்பட்டது.

வாகனத்தின் வகுதி	**வாகனத்தின் எண்ணிக்கை**
வான்கள்	267
மோட்டார் கார்கள்	625
டபள் கப்ஸ்	1,140
ஜீப்	27
ஆம்பியூலன்ஸ்	250
மொத்தம்	2,309

மூலம் : தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்

அதற்கேற்ப தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் இலங்கை வங்கியின் அரச குத்தகைக் கம்பனிகள் மற்றும் மக்கள் வங்கியின் துணைக் குத்தகைக் கம்பனியான பீப்பள்ஸ் லிஸிங் கம்பனி ஆகியவற்றிடமிருந்து போட்டிக்குரிய முறிகளைக் கோருவதன் மூலம் அரச முகவர்களுக்கான வாகனங்களைக் கொள்வனவு செய்துவருகின்றது.

அதற்கேற்ப 2010 – 2012 காலப்பகுதியில் சமனான வருடாந்தத் தவணைகளில் 05 வருடத்தில் செலுத்தப்படக் கூடிய குத்தகை தவணைகளின் அடிப்படையில் ரூபா 8,500 மில்லியன் செலவில் 2.050 வாகனங்களைக் கொள்வனவு செய்துள்ளது. கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள், தொடர்புடைய முகவராண்மைகளுடன் கலந்தாலோசித்து தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் அரசாங்க முகவராண்மைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

4.5 சபைகளிலும் குழுக்களிலும் பதவியணியினர் பங்குபற்றுதல்கள்

இத்திணைக்களத்தின் பெரும்பாலான பதவிநிலை அலுவலர்கள் நியதிச் சட்டசபைகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க உடைமை கம்பனிகளின் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்களாக (திறைசேரி பிரதிநிதிகளாக) பணியாற்றியுள்ளனர். அத்துடன் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திரச் சபைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் உறுப்பினர்களாக திறைசேரி செயலாளர் சார்பாக நியமனம் பெற்றனர். அதற்கு மேலதிகமாக இந்தத்திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் குழு மற்றும் அரசாங்க தொழில் முயற்சிகள் குழு என்பவற்றில் திணைக்களத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பங்குபற்றினர்.

5. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு

தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் அதன் வகிபாகம் நிரல் அமைச்சுக்களின் செலவின மதிப்பீடுகளின் ஏற்பாடுகளை பிரதிநிதித்துப் படுத்தும் பின்வரும் துறைகளின் கீழ் வகுப்பாக்கமொன்று செய்யப்பட்டுள்ளது.

1. அரசாங்க சேவை
2. பாதுகாப்பு
3. சட்ட அமுல்படுத்துகை
4. மனித வளங்கள்
5. உட்கட்டமைப்பு
6. ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பம்
7. சமூகப் பாதுகாப்பு
8. சுற்றாடல்
9. மெய்ப் பொருளாதாரம்

5.1 திணைக்களத்தின் பதவியணி

06/2006 ஆம் இலக்க பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்று நிறுபத்துக்கு அமைவாக 2012 இல் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்புக்குள் பின்வரும் சேவை மட்டங்களின் கீழ் அலுவலர்கள் கடமையாற்றியுள்ளனர்.

சேவை மட்டம்	அலுவலர்களின் எண்ணிக்கை
சிரேஷ்ட மட்டம்	23
மூன்றாம் நிலை மட்டம்	02
இரண்டாம் நிலை மட்டம்	68
ஆரம்ப மட்டம்	30

2012 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் தற்பொழுது காணப்படும் பதவியணியும் பின்வருமாறு

அட்டவணை 12.1
2011 ஆம் ஆண்டிற்கான பதவியணி

பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	உண்மையான பதவியணி
பணிப்பாளர் நாயகம்	01	01
மேலதிகப் பணிப்பாளர் நாயகம்	03	01
பணிப்பாளர்	15	12
பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்	16	08
கணக்காளர்	01	00
நிருவாக அலுவலர்	01	01
மொழிபெயர்ப்பாளர்	01	01
கருத்திட்ட அலுவலர்	04	03
வரவ செலவுத் திட்ட உதவியாளர்	38	30
ஆராய்ச்சி உதவியாளர்	01	04
அபிவிருத்தி உதவியாளர்	00	03
முகாமைத்துவ உதவியாளர்	40	24
சாரதி	15	15
கா.கா.ச.	22	18
மொத்தம்	158	121

5.2மனித வள அபிவிருத்தி

இத் திணைக்களமானது அதன் பதவியணியினர் தமது அலுவலக ஆற்றல்களில் பல்வேறு கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு மேலதிகமாக, அவர்களின் உயர்தொழில் திறமைகள் மற்றும் செயற்றிறன் என்பவற்றினை அதிகரிக்கும் பொருட்டு2012 ஆம் ஆண்டில் பின்வரும் உள்நாட்டு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அனுப்ப முடியுமாக இருந்தது.

5.2.1 வெளிநாட்டுப் பயிற்சி/கருத்தரங்ககள் /கூட்டங்கள்

தொடர் இல.	அலுவலரின் பெயர்	பதவி	நிகழ்ச்சித் திட்டம்	நாடு	காலம்
01	திரு.ஏ.கே. செனவிரத்ன	மேலதிக பணிப்பாளர் நாயகம்	நிதி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கொள்கை	சிங்கப்பூர்	2012.01.09 - 2012.01.20
02	திரு.கே.எம். றிஸ்வி	உதவிப் பணிப்பாளர்	ஆதரவு உள்ளடக்கம் மற்றும் நிலைத்து நிற்கும் வளர்ச்சிக்கு ஆசியாவில் குடிபெயர்வை முகாமை செய்வதில் தொழிலாளர் குடிபெயர்வு தொடர்பான ஆ.அ.வ – ஓஈசீடீ 2 ஆவது மாநாடு	ஜப்பான்	2012.01.08 - 2012.01.20
03	திரு.பீ.எச்.ஏ.எஸ். விஜேரத்ன	பணிப்பாளர்	நிலைத்துநிற்கும் வளர்ச்சிக்கான நிலைத்துநிற்கும் அபிவிரத்திச் சூழல் உபாயங்கள்	சிங்கப்பூர்	2012.03.05 - 2012.03.16
04	திருமதி. ஜே.எம்.எஸ்.டீ. ரத்நாயக்க	பணிப்பாளர்	தென் ஆசியாவில் சகச்சிர அபிவிருத்தி இலக்குகளை துரிதமாக அடைந்துகொள்ளும் ஈஎஸ்.சீஏபி/ஆ.அ.வ./யூஎன்டீபீ உயர் மட்ட உப பிராந்தியப் பேரவை	இந்தியா	2012.02.17 - 2012.02.18
05	திருமதி. ஜே.எம்.எஸ்.டீ. ரத்நாயக்க	பணிப்பாளர்	சார்க் பிராந்திய வறுமைப் பக்கத்தோற்றத் தயாரிப்புக்கான இரண்டாவது அரசாங்கங்களுக்கு இடையிலான கூட்டம்	நேபாளம்	201.03.05 - 2013.03.06
06	திருமதி. பீ.கே.ஏ.டீ.டீ சில்வா	பணிப்பாளர்	ஐரோப்பிய ஒன்றிய அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தில் சமூகப் பாதகாப்பு தொடர்பான வட்டமேசை ஆலோசனை	தாய்லாந்து	2012.03.25 - 2012.03.28
07	திரு.ஏ.கே. செனவிரத்ன	மேலதிக பணிப்பாளர் நாயகம்	ஆசியாவில் எதிர்ச் சுழற்சி அரசிறைக் கொள்கை தொடர்பான கருத்தரங்கு	ஜப்பான்	2012.04.25 - 2012.04.28
08	திருவதி.ஜீ.டீ.சீ.ஏக்கநாயக்க	பணிப்பாளர் நாயகம்	ஆசிய மீள் காப்புறுதிக் கூட்டுத்தாபன முகாமைச் சபையின் கூட்டம்	தாய்லாந்து	2012.04.19 - 2012.04.21
09	திரு.எஸ்.பீ. கிரிவத்துதுவகெ	உதவிப் பணிப்பாளர்	இலங்கைப் பொருளாதார அபிவிருத்தி உபாயம் தொடர்பான குழுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	கொரியா	2012.06.07 - 2012.06.23

தொடர் இல.	அலுவலரின் பெயர்	பதவி	நிகழ்ச்சித் திட்டம்	நாடு	காலம்
10	திருமதி. ஜே.எம்.எஸ்.டீ. ரத்நாயக்க	பணிப்பாளர்	ஆசிய பசுபிக் நாடுகளுக்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் அறுபத்தி எட்டாவது அமர்வு	தாய்லாந்து	2012.05.16 - 2012.05.23
11	திருவதி.ஜீ.டீ.சீ.ஏக்கநாயக்க	பணிப்பாளர் நாயகம்	சபை உறுப்பினர்களின் 35 ஆவது கூட்டம் மற்றும் பங்குவைத்திரப்பவர்களின் 6 ஆவது கூட்டம் - ஆசிய மீள் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்	தாய்லாந்து	2012.06.20 - 2012.06.23
12	திருமதி.எம்.ஆர்.ஆர். அபேவிக்ரம	பணிப்பாளர்	நிலைத்துநிற்கும் நோய்ப் பாதுகாப்பு நிதியளிப்பு தொடர்பான 2 ஆவது மாகாண மட்டக் கலந்துரையாடல் (சுகாதார அமைச்சு)	கம்போடியா	2012.07.03 - 2012.07.06
13	திருவதி.டீ.சீ.டப்ளியூஹப்புகொட	பணிப்பாளர்	டீஎம்சீ கருத்திட்டத் தயாரிப்பு நடைமுறை மன்றம்	பிளிப்பைன்ஸ், மனிலா	2012.08.27 - 2012.08.29
14	திருமதி.வை.பீ. சுமனாவத்தி	பணிப்பாளர்	காலநிலை மாற்றங்களக்கான விவசாய ஏற்புத்திறன்	தாய்லாந்து	2012.11.19 - 11.23

5.2.2 உள்நாட்டுப் பயிற்சிகள்

2012 ஆம் ஆண்டில் பின்வரும் பதவி உறுப்பினர்களுக்கு பல்வேறு துறைகளில் உள்நாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

தொடர் இல.	அலுவலரின் பெயர்	பதவி	நிகழ்ச்சித் திட்டம்	நிறுவகம்	காலம்
01	திருவதி. ஐராங்கனி பெரேரா	முகாமைத்துவ உதவியாளர்	கணினிமயப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த அரசாங்க கணக்கீட்டு முறைமை(CIGAS)	மிலோதா	2012.02.27 - 2012.03.03
02	திருமதி. கே.கே.டீ.என்.எஸ். ஜயதிலக	முகாமைத்துவ உதவியாளர்	சம்பள மாற்றம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	பொதுச் சேவை பயிற்சி நிறுவகம்	2012.04.05 (ஒரு நாள்)
03	திரு.டீ.ஆர்.சமரசேகர	முகாமைத்துவ உதவியாளர்	சம்பள மாற்றம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	பொதுச் சேவை பயிற்சி நிறுவகம்	2012.04.05 (ஒரு நாள்)
04	திருவதி. எம்.டீ. அபேகுணவர்தன	உதவிப் பணிப்பாளர்	உயர்தொழிலாளர்களுக்கான ஆங்கிலத்தில் டிப்ளொமா	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிருவகம்	2012.03.27 – 10 நாட்கள்
05	திருமதி. எஸ்.எச்.ஏ. அனுராதிகா	முகாமைத்துவ உதவியாளர்	தனியாள் கோப்புகளை நிரப்பதலும் பேணுதலும் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	பொதுச் சேவை பயிற்சி நிறுவகம்	2012.04.05

தொடர் இல.	அலுவலரின் பெயர்	பதவி	நிகழ்ச்சித் திட்டம்	நிறுவகம்	காலம்
06	திருவதி. எம்.எம்.ரீ.பிஎஸ். பெரேரா	முகாமைத்துவ உதவியாளர்	பொது நிதி முகாமைத்துவம்தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	பொதுச் சேவை பயிற்சி நிறுவகம்	2012.04.23 - 2012.04.27
07	திருமதி. பீ.எஸ்.பிபெரேரா	முகாமைத்துவ உதவியாளர்	அடிப்படைக் கணினி திறன்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	பொதுச் சேவை பயிற்சி நிறுவகம்	2012.05.28 - 2012.06.01
08	திரு. ஏ. தாகலிங்கம்	முகாமைத்துவ உதவியாளர்	அடிப்படைக் கணினி திறன்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	பொதுச் சேவை பயிற்சி நிறுவகம்	2012.05.28 - 2012.06.01
09	திரு. ஏ.கே. செனவிரத்ன	மேலதிகப் பணிப்பாளர் நாயகம்	வியாபார நிருவாக நிகழ்ச்சித் திட்டத்தில் முதுமாணி (2010 - 12)	கொழும்பு பல்கலைக் கழகம்	2010 – 2012ஆண்டு
10	திருமதி.என்.வீ.எம். சிரிமான்ன	பிரதான முகாமைத்துவ உதவியாளர்	பிரதான முகாமைத்துவ உதவியாளரின் வகிபாகம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	பொதுச் சேவை பயிற்சி நிறுவகம்	2012.08.02 - 2012.0803
11	திரு. ஏ. தாகலிங்கம்	முகாமைத்துவ உதவியாளர்	அலுவலக முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	பொதுச் சேவை பயிற்சி நிறுவகம்	2012.09.03 - 2012.09.09
12	திருவதி.எம்.டீ. அபேகுணவர்தன	உதவிப் பணிப்பாளர்	பொருளியல் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் முதுமாணி 2011/2012	றுஹுணு பல்கலைக் கழகம்	2010 / 2012 ஆண்டு
13	திரு. டீ.ஆர்.சமரசேகர	முகாமைத்துவ உதவியாளர்	ஆட்சேர்ப்பு நடவடிக்கை முகைளைத் தயாரித்தல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	பொதுச் சேவை பயிற்சி நிறுவகம்	2012.07.02 (ஒரு நாள்)
14	திருமதி.பீ.எஸ்.பிபரேரா	முகாமைத்துவ உதவியாளர்	உயர்தர கணினி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (MS Excel & MS Powerpoint)	பொதுச் சேவை பயிற்சி நிறுவகம்	2012.08.20 - 2012.08.24
15	திருமதி. டீ.ஐ. டீ எஸ். விஜேசிங்ஹ	வரவு செலவுத் திட்ட உதவியாளர்	உயர்தொழிலாளர்களுக்கான கணினி வன்பொருள் அடிப்படைகள் தொடர்பான கற்கைநெறி	நவீன தொழில்நுட்பத் திற்கான ஆதர் சீ கிளாக் நிறுவகம்	To 2012.08.25 (இரண்டு வார இறுதி நாட்கள்)
16	திருமதி.என்.வீ.எம். சிரிமான்ன	பிரதான முகாமைத்துவ உதவியாளர்	சம்பள மாற்றம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	பொதுச் சேவை பயிற்சி நிறுவகம்	2012.08.29 (ஒரு நாள்)
17	திரு. டீ.ஆர்.சமரசேகர	முகாமைத்துவ உதவியாளர்	அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் –"பீ" கணக்கு	மிலோதா	2012.09.03 (ஒரு நாள்)
18	திருமதி. டீ.டீ.டீ.என்.கே. ரத்னதிலக்க	முகாமைத்துவ உதவியாளர்	கணினிமயப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த அரசாங்க கணக்கீட்டு முறைமை(CIGAS)	மிலோதா	2012.10.15 (ஆறு நாட்கள்)

5.3. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் நிதி நிருவாகம்

2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் சாதாரண செயற்பாடுகளுக்கான வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகள் செலவினத் தலைப்பு 240 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் கீழே குறிப்பிடப்பட்டவாறு நிகழ்ச்சித் திட்டம் 2 இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(a)	நிகழ்ச்சித்திட்டம் 01		- தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்.
	நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்டம்	01	-வரவு செலவுத் திட்டஉருவாக்கலும் கொள்கையும்
(b)	நிகழ்ச்சித்திட்டம்	02	- அபிவிருத்தி செயற்பாடுகள்.
	நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்டம் 02	02	- வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவிதப் பொறுப்புக்கள்.

வரவு செலவுத்திட்ட உருவாக்கம் மற்றும் கொள்கைகள் மீதான திணைக்களத்தின் நிருவாகச் செலவினங்களுடன் தொடர்பான ஏற்பாடுகள் கருத்திட்டம் 01 இனால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற அதேவேளை, கருத்திட்டம் 02 ஆனது, பல்வேறு செலவின முகவராண்மைகளினால் தேவைப்படுத்தப்படும். எதிர்பாராத செலவினங்களுக்கும் 2012 வரவு செலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட முன் மொழிவுகளின் செயற்படுத்துகை மற்றும் குறித்த நிதியாண்டிற்காக முன்னுரிமைக் கொள்கைகளாக அறிவிக்கப்பட்டவை என்பன தொடர்பான செலவினங்களுக்கும் வசதியளிப்பதற்கான ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்கின்றது.

2012 ஆம் ஆண்டின் அடிப்படை மதிப்பீடுகளுக்கு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்காக ரூபா 74,478,795,000ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த மொத்த ஒதுக்கீடானது பின்வரும் வகையில் பயன்படுத்தப்பட்டது:

(1)	நிகழ்ச்சித்திட்டம் 1 இன் கருத்திட்டம் 1 செலவினம்	ரூபா	1,477,885,934
(2)	நிகழ்ச்சித்திட்டம் 2 இன் கருத்திட்டம் 2 பிற செலவினத் தலைப்புக்களுக்கான மாற்றல்கள் ஒதுக்கீடுகள	ரூபா	71,455,976,456
	மொத்தம்	ரூபா	**72,933,862,390**
	நிலுவை ஏற்பாடுகள்	ரூபா	**<u>1,544,932,610</u>**

அதற்கமைவாக, நிலுவை ஏற்பாடானது ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த ஏற்பாட்டில்2.07 சதவீதமாகும். இது பிரதானமாக வரவு செலவுத் திட்ட முன்மொழிவில் மாற்றமுறாத செலவினங்களின் காரணமாக ஏற்பட்டதாகும்

5.3.1 செலவினத் தலைப்பு 240 இன் சுருக்கம்

வரவு செலவுத்திட்ட ஒதுக்கம், உண்மைச் செலவினச் சுருக்கம் மற்றும் விலகல் ஏற்பாட்டின் சதவீதமாக மற்றும் விலகல் போன்றன பின்வரும் அட்டவணை 5.2 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 5.2
2012 ஆம் ஆண்டுக்கான தலைப்பு 240 இன் கீழான செலவினங்களின் சுருக்கம்

(1)	(2)	(3)	(4)	(5)
விபரம்	**தேறிய ஏற்பாடுகள் (ரூபா.)**	**ஏனைய தலைப்புகளுக் கான உண்மைச் செலவினம்/மாற் றல்கள் (ரூபா.)**	**விலகல் (சேமிப்புக்கள்) (2)-(3) (ரூபா.)**	**தேறிய ஏற்பாடுகளி ன் சதவீதமாக விலகல் (ரூபா.)**
மீண்டெழும் செலவினம்				
1 வரவு செலவுத்திட்ட உருவாக்கமும் கொள்கையும்	71,345,000	68,473,412	2,871,588	4.02
2 வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்புச் சேவைகள் மற்றும் எதிர்பாராத பொறுப்புக்கள்	39,209,500,000	38,706,188,772	503,311,228	1.28

(1)	(2)	(3)	(4)	(5)
விபரம்	தேறிய ஏற்பாடுகள் (ரூபா.)	ஏனைய தலைப்புகளுக் கான உண்மைச் செலவினம்/மாற் றல்கள் (ரூபா.)	விலகல் (சேமிப்புக்கள்) (2)-(3) (ரூபா.)	தேறிய ஏற்பாடுகளி ன் சதவீதமாக விலகல் (ரூபா.)
மொத்த மீண்டெழும் செலவினம்	**39,280,845,000**	**38,774,662,184**	**506,182,816**	**1.29**
மூலதனச் செலவினம்				
1 வரவு செலவுத்திட்ட உருவாக்கமும் கொள்கையும்	1,507,450,000	1,409,412,522	98,037,478	6.5
2 வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்புச் சேவைகள் மற்றும் எதிர்பாராத பொறுப்புக்கள்	33,690,500,000	32,749,787,684	940,712,316	2.8
மொத்த மீண்டெழும் செலவினம்	**35,197,950,000**	**34,159,200,206**	**1,038,749,794**	**2.95**
முழுமொத்தம்	**74,478,795,000**	**72,933,862,390**	**1,544,932,610**	2.07

மூலம்: தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்

5.3.2 2012 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டங்களின் மூலம் திணைக்கள வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் உண்மைச் செலவினம்.

2012 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கங்கள் தொடர்பான ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு செயற்றிட்டத்திற்குமான திணைக்களத்தின் உண்மைச் செலவினம் மற்றும் மதிப்பீடுகள் என்பவற்றினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகள் நி.பி. 66 மாற்றல்கள் மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகளை கவனத்திற்கொண்டதன் பின்னரான திருத்தப்பட்ட ஏற்பாடுகள் நிரல் 3 இல் காட்டப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் செலவினங்களுக்கு இடையேயான வேறுபாடு அட்டவணை 5.3 நிரல் (6) இன் கீழ் சேமிப்புக்களாகக் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 5.3

நிகழ்ச்சித்திட்டம் 01 இன் கீழான செலவினம் - செயற்பாட்டு நடவடிக்கைகள்

கருத்திட்டம் 01 – வரவு செலவுத்திட்ட உருவாக்கமும் கொள்கையும்

(1) விடயம்	(2) மதிப்பீடு (ரூபா)	(3) தேறிய ஏற்பாடு (ரூபா)	(4) உண்மை (ரூபா)	(5) சேமிப்புகள் (3)-(4) (ரூபா)	(6) பிற தலைப்புக் கு மாற்றப்பட் டவை (ரூபா)
மீண்டெழும் செலவினம்					
தனிப்பட்ட வேதனாதிகள்	52,500,000	53,080,000	51,210,519	1,869,481	3.52
ஏனைய மீண்டெழும் செலவினம்	18,845,000	18,265,000	17,262,893	1,002,107	**5.48**
மொத்த மீண்டெழும் செலவினம்	**71,345,000**	**71,345,000**	**68,473,412**	**2,871,588**	**9.00**
மூலதனச் செலவினம்					
மூலதன ஆதனங்களின் புனரமைப்பும் மேம்பாடும்					
கட்டடங்கள்					
இயந்திரங்கள் வாகனங்கள்	500,000 500,000	500,000 500,000	- 489,063	500,000 10,937	100 2.18
நிலையான சொத்துக்கள் கொள்வனவு					
வாகனங்கள்	1,000,000,000	1,500,000,000	1,403,221,379	96,778,621	6.45
தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும்	5,000,000	5,607,000	5,584,780	22,220	0.4
இயந்திரங்கள்	850,000	671,000	-	671,000	100

(1) விடயம்	(2) மதிப்பீடு (ரூபா)	(3) தேறிய ஏற்பாடு (ரூபா)	(4) உண்மை (ரூபா)	(5) சேமிப்புகள் (3)-(4) (ரூபா)	(6) பிற தலைப்புக் கு மாற்றப்பட் டவை (ரூபா)
திறன்விருத்தி					
பயிற்சியும் திறன்விருத்தியும்	600,000	172,000	117,300	54,700	31.8
மொத்த மூலதனச் செலவினம்	**1,007,450,000**	**1,507,450,000**	**1,409,412,522**	**98,037,478**	**6.50**
மொத்தச் செலவினம்	**1,078,795,000**	**1,578,795,000**	**1,477,885,934**	**100,909,066**	**6.39**

மூலம்: தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்

மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டவாறு நிகழ்ச்சித்திட்டம் 1 இன் கருத்திட்டம் 01 இற்காக வழங்கப்பட்ட தேறியஒதுக்கீட்டில்93.61% பயன்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 5.4

செலவின நிகழ்ச்சித்திட்டம் 02 – அபிவிருத்திச் செயற்பாடுகள்

கருத்திட்டம் 02 – வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவித பொறுப்புக்கள்

(1) விபரம்	(2) தேறிய ஏற்பாடு ரூபா.	(3) பிற தலைப்புகளு க்கான மாற்றல் ரூபா.	(4) (ஒதுக்கீட்டு கணக்கு பிரகாரம்) சேமிப்பு ரூபா.	(5) விலகல் வீதம் %
மீண்டெழும் செலவினம்				
பிற மீண்டெழும் செலவினம்	39,209,500,000	38,706,188,722	503,311,228	1.28
மொத்த மீண்டெழும் செலவினம்	**39,209,500,000**	**38,706,188,722**	**503,311,228**	**1.28**
மூலதனச் செலவினம்				
வாகனங்கள் கொள்வனவு	1,240,000,000	1,200,503,467	39,496,533	3.18
மீள் கட்டமைப்பு				
வெற்றியளிக்காத தொழில்முயற்சிகளுக்கான கடப்பாடுகள்	30,000,000	30,000,000	-	-
வெளிநாட்டு உதவி தொடர்பான செலவினம்				
- வெளிநாட்டு உதவி கடன்கள் (12)	9,200,000,000	8,996,721,728	203,278,272	2.21
- வெளிநாட்டு உதவி மானியங்கள் (13)	409,000,000	302,152,210	106,847,790	26.12
- மீள செலுத்த முடியுமான வெ.நாட்டு உதவிக்கடன்கள் (14)	95,000,000	95,000,000	-	-
- மீள செலுத்த முடியுமான வெ. நாட்டு உதவி மானியங்களை (15)			-	-
- மறுதரப்பு நிதி (16)			-	-
- வெளிநாட்டு உதவி தொடர்பான உள்நாட்டு நிதியம் (17)	4,549,700,000	4,549,399,631	300,369	.007
பிற நாணாவித கொடுப்பனவுகள் (11)	18,166,800,000	17,576,010,648	590,789,352	3.25
மொத்த மூலவள செலவினம்	**33,690,500,000**	**32,749,787,684**	**940,712,316**	**2.79**
முழுத்தொகை	**72,900,000,000**	**71,455,976,406**	**1,444,023,544**	**1.98**

மூலம்: தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்

பல்வேறு செலவின முகவராண்மைகள் / நிறுவனங்களினது எதிர்பாராத செலவுகள் மற்றும் 2012 வரவு செலவுத்திட்ட உரையில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தல் என்பவற்றிற்கு மேலதிக ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்காக இக் கருத்திட்டத்தின் கீழ் ரூபா. 72,900,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் பல்வேறுபட்ட செலவிடும் நிறுவனங்களுக்காக இந்தத் தொகையில் ரூபா. 71,455,976,406 வழங்கப்பட்டது. இது மொத்த ஒதுக்கீட்டின் 98.02 % ஆக இருந்தது.

அட்டவணை 5.5
2012 ஆம் ஆண்டுக்கான அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு

வகை	2012 அனுமதிக்கப்பட்ட எல்லை (ரூபா)	உண்மை 2012 (ரூபா)
செலவின உச்ச எல்லை	7,000,000.00	3,968,834.00
கிடைப்பனவு உச்ச எல்லை	3,700,000.00	4,813,623.75
வரவு நிலுவை உச்ச எல்லைகள்	35,000,000.00	22,223,115.02

2003.12.31 ஆம் திகதி 114 இலக்க, வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், திணைக்கள செலவினத் தலைப்பிற்கு உட்பட முற்பணக் கணக்கு குறியீடு 240 - 011 இன் கீழ் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை மாத்திரமே மேற்படி அட்டவணையிலுள்ள தரவுகள் உள்ளடங்கியுள்ளன. 118 ஆம் இலக்க, சுற்றறிக்கைக்கு ஏற்ப, 2012 ஆம் ஆண்டின் பொதுஅரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு நிலுவைகளை செலுத்தி முடிக்கும் நோக்கில் நிறுவனத்திற்கு உள்ளே மற்றும் வெளியே மாற்றப்பட்டிருந்த முற்பணக் கணக்கு குறியீடு 240 – 012 இன் கீழ் செலவினத் தலைப்புகளுடன் மேற்கொண்ட செலவு ரூபா 3,874,959.90 மற்றும் கிடைப்பனவு ரூபா 3,947,234.00 ஆகும். இதன் பிரகாரம், அரச அலுவலர்களின் அனுமதிக்கப்பட்ட முற்பணக் கணக்கு எல்லைகளுடன் திணைக்களம் உடன்பட்டுள்ளது.

அட்டவணை 5.6
2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன்கள்

கடன்கள்/முற்பணம்	வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை	தொகை (ரூபா.)
விழா முற்பணம்	96	480,000
விஷேட முற்பணம்	51	120,000
இடர் மற்றும் சைக்கிள் கடன்கள்	100	3,368,834
மொத்தம்	**247**	**3,968, 834**

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்.

5.3.3 2012 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு வினாக்கள்

2012 ஆம் ஆண்டின்போது கணக்காய்வாளர் நாயகத்தின் 07 விசாரணைகள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அனைத்து விசாரணைகளுக்கும் விடையளிக்கப்பட்டன.